ஆரோக்கியதீபிகை.

ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

ஆசிரியர், டாக்டர், யூ. ராமராவ், யூ. கிருஷ்ணாராவ், எம். பி. பி. எஸ்

நீலகிரி மலையிலுள்ள தோடர்ஸ்திரீகள். இயற்கை முறைகளை அனுசரித்து அதன்வழி நடப்போர்.

ஆரோக்கிய தீபிகை,—சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

சுதேசமித்திரன், சென்னை—17-1-31:—டாக்டர்கள் யு. ராமராவும் யு. கிருஷ்ணராவும் ஆசிரியர்களாக இருந்து நடத்தி வரும் இப்பத்திரிகை ஆரம்பித்து எட்டு வருஷங்களாகி ஒன்பதாம் வருஷம் தொடங்குகிறது. திருக்கழுக்குன்றத்தின் மலையையும் கோயிலையும் முன்படமாக அணிந்திருக்கும் இவ்வருஷ முதல் இதழானது மலை தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு செல்வோரின் சுகாதாரமானது எவ்வாறு மேம்பாடடைகிறதென்று இக்காலத்திய சாஸ்திர அறிவோடு இணைத்து விளக்குகிறது. பல்வலியைப்பற்றியும் மரக்கறி உணவைப் பற்றியும், பள்ளிமாணவர்களின் திருஷ்டிக்குறைவைப்பற்றியும் இன்னும் பல நித்யப்படி உபயோகமான பல விஷயங்களைப்பற்றியும் பல மேதாவிகள் வியாசம் எழுதியிருக்கிறார்கள். வியாதி, சுகாதாரம் போன்ற விஷயங்களைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதும்போதும் ஆசிரியர்கள் தெளிவாயும் சுலபமான பாஷையிலும் எழுதிவருவது மிகவும் மெச்சத்தக்கது. வருஷச்சந்தா ரூபாய் 1-8-0 யாக யிருந்து வரும் இப்பத்திரிகை தமிழ், தெலுங்கு, கன்னட பாஷைகளிலும் வெளியிடப்படுகிறது. சென்னை, தம்புசெட்டி தெருவில் 323, நெம்பரில் ஆசிரியர்களுக்கு எழுதி இதன் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தெய்வபக்தன் 19-1-31:—வைத்திய நிபுணர்களால் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை 'ஆரோக்கிய தீபிகை' யானது உங்கள் வீடுகளில் நுழையச் செய்கின்றது. பிரதி மாதமும் இதில் ஆரோக்கியத்திற்கு முக்கியமான விஷயங்கள் அதாவது உணவு போஷிப்பு, நோய்களைத் தடுக்கும் மார்க்கம், சிசுக்கள் பராமரிப்பு அவைகளின் ஆகாரம் குழந்தைகளைப் பழக்குதல் நோயாளிக்குச் செய்யவேண்டிய சிச்ருஷை கர்ப்பிணி நடந்துகொள்ள வேண்டிய முறைகள் முதலியவற்றை இதில் காணலாம். எந்தப்பாஷையிலும் இதன் வருட சந்தா ரூ. 1-8-0. மானேஜர், "ஆரோக்கிய தீபிகை" தபாற்பெட்டி 166, சென்னை.

ஊழியன், 3-2-31.—இது ஓர் மிக நேர்த்தியான மாதப் பத்திரிகை. இதன் ஆசிரியர் டாக்டர் யூ. ராமராவ், யூ. கிருஷ்ண ராவ் (எம். பி. பி. எஸ்.) ஆகிய இருவருமாவர். இதன் ஜனவரி இதழில் சகல ஜனங்களும் உடல் நல சம்பந்தமாக உணர்ந்து கொள்ளவேண்டிய பற்பல அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகையின் அமைப்புச் சிறந்ததாகும். "ஆரோக்கிய தீபிகைப் பிரசுரக்காரர், ௩௨௩, தம்புச் செட்டித் தெரு, சென்னை" என்ற விலாசத்திற்கு எழுதி இப்பத்திரிகை பெறலாம். இதன் வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூ. ௧—அ—0 ம் வெளி நாட்டுக்கு ரூ. ௨—0—0 ம் தனிப் பிரதி விலை அணா ௨ ம் ஆகும்.

ஜனமித்திரன், 6-2-31:—'ஆரோக்கிய தீபிகை' யெனும் அரிய மாதப் பத்திரிகையின் தொகுதி 8. பகுதி 1 வரப் பெற்றோம். இதன் ஆசிரியர்கள் டாக்டர் யூ. ராமராவ், யூ. கிருஷ்ண ராவ் (எம். பி. பி. எஸ்.) ஆகிய இருவருமாவர். இப்பத்திரிகை தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம் முதலிய நான்கு பாஷைகளிலும் பிரசுரிக்கப்பட்டு வருகிறது, "ஆரோக்கிய தீபிகைப் பிரசுரக்காரர், 323, தம்புச் செட்டித்தெரு, சென்னை." என்ற விலாசத்திற்கு எழுதி இப்பத்திரிகை பெறலாம். இதன் வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூ. 1-8-0ம் வெளி நாட்டுக்கு ரூ. 2ம் தனிப் பிரதி விலை அணா 2ம் ஆகும்.

தேசாபிமானி, கூடலூர், 7-2-31:—ஆசிரியர்களாகிய ஸ்ரீமான்கள் டாக்டர் யூ. ராமராவ் யூ. கிருஷ்ண ராவ், எம். பி. பி. எஸ். நடத்திவரும் ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் ஆரோக்கிய தீபிகை என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் 1931ஆ ஜனவரி மாதத்து சஞ்சிகை கிடைக்கப் பெற்றோம். இப்பத்திரிகை ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கு பாஷையிலும் தனித் தனியே பிரசுரிக்கப்படுகின்றது. இதன் சந்தா வருஷமொன்றுக்கு ரூ. 2.

லோகோபகாரி:—சென்னையில் பேர் பெற்று விளங்கும் ஆங்கில (முறை) வைத்தியரான டாக்டர் ராமராவை ஆசிரியராகக் கொண்ட ஆரோக்கிய தீபிகையின் எட்டாவதாண்டு முதல் இலக்கம் வரப் பெற்றோம். இதில் மக்கள் உடல் நலத்திற்குரிய பல அரிய கட்டுரைகள் வெளியாயிருக்கின்றன. முன்னோர்கள் விதித்த பழைய ஆசார முறைகள் இதில் புதிய முறையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டுமென்பது நமது கருத்து. டாக்டர் ராமராவ் ஆங்கிலத்திலும், தமிழிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும் சுகாதாரத்தைப் போதிக்கும் நாலு மாதப் பத்திரிகைகளை நடத்தி வருகிறார். அதன் வாயிலாக அவர் அரிய தோர் தேசத் தொண்டு செய்து வருகிறார் என்று சொல்ல வேண்டும். நல்ல காகிதத்தில் அழகிய படங்களுடன் வெளியாகும் இச்சஞ்சிகையின் வருஷ சந்தா ரூ. 1-8-0 தான். பத்திராதிபர்: "ஆரோக்கிய தீபிகை" சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பொருளடக்கம்.

30 JAN

		பக்கம்.
ஆகாரத்தில் கலப்படம். III. இந்தியாவில் ஆகார கலப்படத்தைக்குறித்த சட்ட திட்டம்.	...	233
ஆரோக்கிய தேவிக்குப் பிரார்த்தனை. எம். வி. நரஸிம்ம ராவ், பர்ஹாம்பூர்	...	236
'பெருவியாதி'—ஒரு நாடகம்—டாக்டர் ஜி. ரகுநாதராவ், டி. டி. எம்., பீஹார், ஒரிஸ்ஸா பெருவியாதி ஆராய்ச்சி செய்யும் உத்தியோகஸ்தர், புரூலியா (தொகுதி 8, பகுதி 11, பக்கம் 222லிருந்து தொடர்ச்சி)	...	237
சில அனுபோகங்கள்—டாக்டர் டி. பி. சுந்தரம், எல். எம். எஸ்., ரெஸிடெண்டு ஹவுஸ் ஸர்ஜன், கண்ணாஸ்பத்திரி, எழும்பூர், மதராஸ்	...	244
மில்லிக்கொசுவின் ஆச்சர்யமான வீரச்செயல்கள்—மிஸ்ஸர்ஸ் க்ளூயீஸ்	...	246
உமது குழந்தைக்கு என்ன வயது? அதன் வயதுக்குத்தக்கபடி எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடக்கிறதா?	...	250
பிழைத்திருத்தம்	...	252

குணமாகாத மூத்திர வியாதிகளுக்குப் புதிதாகக் கண்டு பிடித்திருக்கும் அற்புதமான சிகிச்சை!

வெட்டை ரோகத்திற்கு சிறந்தது!

கோனோ கில்லர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது

இதுதான் இப்பொழுது எடுத்த ஔஷதம். ஆங்கில, உள்நாட்டு வைத்தியங்கள் உங்களைக் குணப்படுத்தி யிராவிடில், வாக்ஸைன்களும் இஞ்செக்ஷனும் பலன் தந்திராவிடில், கடைசியாகவேனும் நமது கோனோ—கில்லர் என்னும் ஔஷதத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள். உங்களுக்கு வியாதி கண்டு எவ்வளவு நாளாகியிருந்தாலும் அது குணப்படுத்திவிடும். ஸ்திரீகள் புருஷர்கள் இவர்களுக்கு ஏற்படும் மூத்திர வியாதிகளுக்கும், எல்லாவித வெட்டை நோய்களுக்கும், மூத்திரம் அதிகமாக இறங்குவதற்கும் மூத்திரம் பெய்கையில் ஏற்படும் வலியை நிவர்த்திசெய்யவும், மூத்திரப்பையில் ஏற்பட்டிருக்கும் அழற்சியைப் போக்கவும் வெட்டை வியாதிக்கிருமிகளால் ஏற்படும் வேறு பல வியாதிகளைப் போக்கவும் இது எடுத்தது. அந்நிய நாடுகளுக்கு:—50 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு 7 ஷி; தபாற் கட்டணம் உள்பட முன் பணம் அனுப்புங்கள். உள்நாடு 50 மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு ரூ. 3 வி.பி. சார்ஜு வேறு. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதவும்.

டாக்டர் டி. என். ஜஸானி, 137, கிகா தெரு, (குலால்வாடி), பம்பாய் 4.

Dr. D. N. Jasani, 137 Kika Street, (Gulalvadi) Bombay 4.

தந்தி விலாசம்:—கோனோ கில்லர், பம்பாய். Tel:—"GONO KILLER". BOMBAY.

ஏஜண்டுகள்: தாதா அண்டு கம்பெனி,

52, நைனியப்ப நாயகன் தெரு, சென்னை.

1932 25-வது பதிப்பு 1932

"ஸ்ரீவித்யா"

ஜெம், ஜென்ட்ஸ், பாக்கெட்,

பிஸினஸ், பாபுலர், & அபீஷியல்

டைரிகள்.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

பப்ளிஷர்ஸ் :—

ஸ்ரீவித்யா பிரஸ்,

கும்பகோணம்.

ROWJEE'S

EAR DROPS.

காதிற்குத் தைலம்.

காது, மூக்கு, தொண்டை முதலிய இடங்களில் காணும் வியாதிகளை குணப்படுத்துவதில் பெயர்போன ஒரு வைத்திய நிபுணர் குறிப்பிட்ட முறைப்படி இது தயார் செய்யப்பட்டது. காதுகளிலிருந்து சீழ்வடிதல் முதலியவைகளை இது உடனே நிறுத்திவிடும் காதுகளுக்குள்ளிருக்கும் புண்களை ஆற்றி, வலியை நிறுத்தும், சிறியோர், பெரியோர் அனைவரும் இதை உபயோகிக்கலாம். காலை மாலை இருவேளையும் 5 பொட்டு மருந்தைக் காதுகளில் விட்டுக்கொள்ள வேண்டும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்,

தபாற்பெட்டி, 166, சென்னை.

கங்கா.

கைக்குட்டைக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களில் இது முதல் தரமானது.

இது ஒரு ஆச்சர்யமான பரிமள வாசனைத் திராவகம், ரம்மியமும், நீடித்த வாசனையுமுள்ளது. நாகரீகமுள்ள ஸ்திரீகள், அதிகமாய் விரும்பும் வாசனைத் திராவகமிது. இது ஸ்திரீகளுக்கு ஏற்ற சன்மானம்.

புட்டி 1க்கு ரூ. 2-8-0.

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்,

323, தம்புசெட்டித் தெரு,

சென்னை.

நல்ல அதிர்ஷ்டம் ! நல்ல சமயம் நல்ல அதிர்ஷ்டம் !!

ஐரோப்பிய குதிரைப் பந்தய லாட்டரிக்கள்.

இங்கிலீஷ் குதிரைப் பந்தயத்தில் ஸ்வீப்புகள், ஸ்டேக்குகள்.

இது மியூடியல் லிமிடெட் கம்பெனியாரால், லிச்டென்ஸ்டைன் பிரின்ஸிபாலிடியாரிடமிருந்து லைசென்ஸ் பெற்றுக்கொண்டு, அந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவர், போலீஸ், பொதுஜனங்கள், பேபர்காரர்கள் இவர்கள் முன்னிலையில், நடத்தப்படும்.

அடுத்த பந்தயம்.	பட்வாடா செய்யப் படும் தொகை.	எமது ஆபீசில் ஆர்டர் வாங்குவதற்கு கடைசி நாள்.	ஒவ்வொரு டிக்கட்டிற்கு செலுத்தவேண்டிய சந்தா.
லின்கன்ஷயர் ஹான்டிகாப் 1932ஞ மார்ச்சுமீ 16உ லின்கன் (இங்கிலாந்தில்) ஓடப்படும்.	பவுன் 90,000 டிக்கட்டுகள் 400,000	3—2—1932.	ரூ. 5. ஸிலோன் 7½ ஷில்லிங்கு பி. பி. ஒ. சிங்கப்பூர், எஸ். எஸ். எப். எம். எஸ். முதலிய வெளி நாடுகளுக்கு ஷி. 8 பி. பி. ஒ.

ஐரிஷ் ஆஸ்பத்திரி ஸ்வீப் டிக்கட்டுகளும் நம்மிடம் கிடைக்கும்.

நம்பிக்கைக்கும், ஆலசியமின்றி வேலை செய்வதற்கும் இந்த ஒரு வியாபாரஸ்தலம்தான் பேர்போனது.

பணத்துடன் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

டி. வி. ரெட்டி,

அதிகாரம்பெற்ற ஏஜெண்டு.

ராஜமஹேந்திரபுரம்,

(கீழ்க்கோதாவரி ஜில்லா.)

தந்திவிலாசம்—"லக்"

ராஜமஹேந்திரபுரம்.

"கோக்கோமால்ட்"

மிகுந்த போஷணகுணமுள்ள ஆகாரப்பானம். சூடாயிருந்தாலும் ஜில்லென்றிருந்தாலும் இனிப்பைத்தரக்கூடியது.

நிகரற்ற ஆரோக்கியமுள்ள ஆகாரம்.

½ பவுண்டு, 1 பவுண்டு, டின்களில் கிடைக்கும்.

கோக்கோமால்டில்

சூரிய வெளிச்சத்திலுள்ள ஜீவஸத்துப் பொருளும், ஏ. பீ. கலந்த ஜீவஸத்துப் பொருள்களும் அடங்கியுள்ளன. அதில் நிரம்பியுள்ள சாக்லெட், பாலேட்டு மணத்தை குழந்தைகள் விரும்புகின்றன.

அதை பரீக்ஷித்துப்பார் உனக்கு நன்மையுண்டு.

டிஸ்ட்ரிபியூடர்கள்.

டாட்ஜ் அண்டு சைமோர் லிமிடெட்,

10/14 அரமனேக்காரத் தெரு, சென்னை.

பால வித்யா.

1930ஞு ஜனவரிமீ முதல் இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதத்திலும் வெளிவரும் தமிழ் ஜர்னல்.

இதில் மகா அற்புதமான நாவல்கள் மாதம் ஒன்றுக்கு 40 பக்கங்களுக்கு குறையாமல் துடர்ச்சியாக பிரசுரிக்கப்படும்.

இதுவரையில் வெளிவந்த நாவல்களைவிட இதில் சிறுவரும், சிறுமியரும் உவந்து படித்து புகழக்கூடிய உயர்ந்த நீதிகளும் கற்பின் பிரபாவமும், காதலின் தன்மையும், உலக நடவடிக்கைகளும் ஹாஸ்யவிநோத அற்புதச் செய்கைகளும் பொருந்தியுள்ள நவீனங்களாக இருக்கும்.

புத்தகம் முடிந்த பிறகு ஏற்படுத்தப்படும் விலையைவிட இந்த ஸஞ்சிகை சந்தாதாரர்களுக்கு ஷெ நவீனங்கள் குறைந்த விலைக்கு அடங்கும்.

நேயர்கள் உடனே சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிக்கும்படி கோரப்படுகிறது.

வருட சந்தா :—

தபாற்கூலியுள்பட ரூபா. **1-8-0** தான்.

வெளிநாடுகளுக்கு ரூபா. **2-0-0**.

எல்லா விடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டுகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

N. B.—பால வித்யா மாதிரி (இனும்) ஸஞ்சிகை விரும்புவோர் தபாற் கூலிக்காக ½ அணு லேபில் அனுப்பி விலாஸமும் தெரிவித்தால் பெற்றுக்கொள்ளலாம்.

பப்ளிஷர்ஸ் :—

ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.

ஆரோக்கியதீபிகை

ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

ஆரோக்கிய மார்க்கங்களைப் போதிக்கும் பத்திரிகை

ஆசிரியர், டாக்டர், யூ. ராமராவ், யூ. கிருஷ்ணராவ், எம்.பி.பி.எஸ்.

பத்திரிகாலயம் : 323, தம்புசெட்டித் தெரு, சென்னை.

வருடச் சந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ. 2-0-0. தனிப்பிரதி விலை அணு 2.

தொகுதி 8] டிசம்பர், **1931** [பகுதி **12**

ஆகாரத்தில் கலப்படம்.

III. இந்தியாவில் ஆகாரக்கலப்படத்தைக் குறித்த சட்டதிட்டம்.

முன் இரண்டு வியாஸங்களில், இந்தியர்களின் முக்கிய ஆகாரப் பதார்த்தங்களாகிய பாலும், நெய்யும் எவ்வாறு கலப்படமாகி அவை உண்பதற்கு உபயோகப்படாமலும், உண்போர்களின் ஆரோக்கியத்திற்கு அபாயத்தை விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கின்றன வென்பதைப்பற்றிச் சொன்னோம். இதேமாதிரி மற்றும் சில ஆகாரப் பதார்த்தங்கள் கலப்படமாகின்றன. அவை எண்ணெய்கள், வெண்ணெய், கோதுமைமாவு முதலியனவாம். வட இந்தியாவில் ஜனங்கள் கடுகெண்ணெயை உபயோகிக்கிறார்கள். தென்னிந்தியாவிலோ நல்லெண்ணெய் உபயோகப்படுத்தப் படுகிறது. இவ்வெண்ணெய்களோடு கலப்படங்கள் முறையே குசுமா எண்ணெயும், மணிலாகொட்டை எண்ணெயுமாகும். வெண்ணையோடு மார்கரெயின் என்னும் வஸ்துவைக் கலந்து அதை வெண்ணையாக விற்கப்படுகிறது. ஆரம்பத்தில் மார்கரெயின் மிருகக் கொழுப்புகளினால் தயாரிக்கப்பட்டது. இப்போது, பனை எண்ணெய், தேங்காயெண்ணெய் முதலிய வஸ்துக்களிலிருந்து செய்யப்படுகிறது. வெண்ணையில் (வங்காளச் சட்டப்படி 100-க்கு 16 விகிதமும்), சென்னைச் சட்டப்படி 100-க்கு 20 விகிதமும் ஜலம் கலந்திருந்தால், அது கலப்படம் என்று சொல்லப்படும். கோதுமையும் அரிசியும் இந்தியாவின் முக்கிய ஆகாரப்பதார்த்தங்களாகும். கோதுமை மாவில், சாம்பல் 100க்கு 2 விகிதத்திற்குக் மேற்பட்டாலும், 'க்ளுடின்' (ஒட்டும் குணமுள்ள பசை), 100க்கு 8 விகிதத்திற்குக் கம்மிப்பட்டாலும், அதைக் கலப்படமென்றே சொல்லவேண்டும். சென்னையில், ரொட்டியை, ரஸாயன சாஸ்திர விதிப்படி பரீக்ஷித்துப் பார்த்ததில், அதில் படிகாரம் கலந்திருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மட்டமாவிலிருந்து செய்யும் ரொட்டிக்கு ஒஸ்தி ரொட்டியின் நிறம் வருவதற்காக

இது கலக்கப்படுகிறதாகத் தெரியவருகிறது. நெய்யில் 100க்கு ஒன்றுக்கு மேற்பட்டு ஜலம் இருப்பதாக ரஸாயன பரீக்ஷையில் ஏற்பட்டால், அது கலப்பட நெய்யாகும். பசும் பாலைப் பரீக்ஷித்துப் பார்த்தால், அதில் பால் கொழுப்பு 100க்கு மூன்றைவிடக் குறைவாயும், பால் கொழுப்பு தவிர இதர பாலிலுள்ள வன்பொருள்கள் 100க்கு 8½க்கு கம்மியாயும், நைட்ரோஜன் (உப்பு வாயுவு) 100க்கு 0·5க்கு குறைந்தும் இருந்தால், அந்தப் பால் அப்பட்டமான பாலன்று. எருமைப்பாலில், பால்கொழுப்பு 100க்கு 4·5க்கு கம்மியாக விருந்தாலும், பால் வன்பொருள்கள் 100க்கு 9க்கு கம்மியாக விருந்தாலும், உப்பு வாயுவு 100க்கு 0·53க்கு குறைந்திருந்தாலும், அதைக் கலப்படமென்றே கருதவேண்டும்.

ஆகாரத்தின் இஷ்டம் நபரைப்பொருந்தியதாக விருந்தபோதிலும், அந்நபர் வாங்கும்படியான ஆகாரமானது சுத்தமானதாயும், நல்லதாயும், கலப்படமின்றியுமிருக்கவேண்டும். பின் சொல்லிய விஷயத்தில் தான் அரசாங்கத்தார் தலையிட்டுக்கொள்ள வேண்டும். 1855-ம் வருஷத்தில் இங்கிலாந்தில், ஆகாரக்கலப்பட விஷயமாக ஒரு தனிக்கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. அக்கமிட்டியார் சிபார்சு செய்த விஷயங்களை அனுசரித்து ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்த சட்டம் 20 வருடகாலம் அமுலுக்கு வராமலே பிரயோஜனமற்றிருந்தது. 1875ம் வருடத்தில் தான் இந்த சட்டம் அந்நாட்டில் கண்டிப்பான அமுலுக்கு வர ஆரம்பித்தது. அந்த சட்டப்படி, எந்த ஆகாரமும் கெடுதலென்று தென்பட்டால், [illegible] பரீக்ஷித்துக் கைப்பற்றுவதற்கு [illegible] 1928ம் வருடத்தில் பிறந்த ஆகார மருந்து தினுசுகள் இவற்றின் கலப்படச் சட்டமானது இப்போது இங்கிலாந்தில் அமுலுக்கு வந்துகொண்டிருக்கிறது. இது 1875ம் ஆண்டில் பிறந்த சட்டத்தையும் இன்னும் இதர சட்டங்களையும் ஒன்று திரட்டி ஏற்படுத்திய சட்டமாகும்.

தமிழ்நாடு ★ சென்னை-600 [illegible]
128580

இந்தியாவிலோ, கொஞ்ச காலத்திற்கு முன்பு தான் ஆகார வஸ்துக்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் மாகாண அரசாங்கத்தார் நோக்கம் வைத்தனர். 1919ம் வருஷத்தில் 1919ம் வருஷத்திய 6வது ஆக்டு ஆகாரக்கலப்படச் சட்டம் பிறந்து அது கல்கத்தா கார்போரெஷனில் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டது. அடுத்த வருஷத்தில், வங்காளத்தில் எங்கெந்த ஊர்களில் ஒரு ஆரோக்கிய உத்தியோகஸ்தர் அல்லது சானிடெரி இன்ஸ்பெக்டர் இருக்கின்றனரோ, அந்தந்த முனிசிபாலிடிகளிலெல்லாம் அந்த சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டது. கல்கத்தா கார்பெரோஷஞர் இந்த சட்டத்தை வெகு விமரிசையாக நடத்தி வருகின்றனர். கல்கத்தா ஹெல்த் ஆபீசர் எழுதிய 1929-ம் வருஷத்திய ரிபோர்டிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் விஷயங்கள் நமது வாசகர்கள் கவனிக்கத்தகுந்தவை :—

"ஆகார இன்ஸ்பெக்டர்கள் இவ்வருடத்தில் சேகரித்த மொத்த ஆகார மாதிரிகள் 5862. சென்ற வருஷத்தில் 5659. இந்த மாதிரிகளுள், பால் 874, நெய் 1468, வெண்ணெய் 308, மிட்டாய் தினுசுகள் 780, கடுகெண்ணெய் 1239, ஜவ்வரிசி 117, சாஞ 44, பார்லி 92, மாவு 255, தேயிலை 276, கோவாகிர் 31, ஆரோரூட் 10, தயிர் 66, மருந்து தினுசுகள் 40, அரிசி 811, குல்பிமலாய்பராப் 36, சர்க்கரை 1, காடிசூ 32, நாஞதவித பண்டங்கள் 75. இந்த மாதிரி சமான்களை கார்பெரேஷன் லெபரேடரியில் அனலிஸ்டு என்னும் ரஸாயன உத்தியோகஸ்தரால் பரிசோதிக்கப்பட்டதில், 882 தினுசுகள் கலப்படமென்று ஏற்பட்டது. இந்தக் கலப்பட வஸ்துக்களில் 263 பால், 121 நெய், 20 வெண்ணெய், 74 மிட்டாய் தினுசுகள், 382 கடுகெண்ணெய், 6 தேயிலை, மற்றவை இதர வஸ்துக்கள் கலப்படமென்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆகார இன்ஸ்பெக்டர்களால பிரிவாது செய்யப்பட்ட நபர்கள் 2599. 1908-ம் வருஷத்தில் அந்த நபர்களின்

மொத்தம் 2506. இவற்றுள் 1690 நபர்களுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. மொத்த அபராத வருமானம் ரூ 21, 384. முன் வருஷத்திய வருமானம் ரூ 31,615-8-4. ஆகார இன்ஸ்பெக்டர்கள் முக்கியமாய் கடுகெண்ணெய் ஆடி விற்கப்பட்ட இடங்களின்மேல் நாட்டம் வைத்தனர். 1239 மாதிரி கடுகெண்ணெய் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் 328 கலப்படம். இந்த வருடம் முழுதிலும் கல்கத்தாவில் 11 ஆகார இன்ஸ்பெக்டர்கள் வேலை செய்து வந்தனர். இந்த உத்தியோகத்தை புனர் நிர்மாணம் செய்யவேண்டி ஒரு தனி கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் தீர்மானம் கார்போரெஷனில் ஆலோசிக்கப் படுகிறது. அதிக உத்தியோகஸ்த்தர்களை வைக்கும்படி உத்தரவாஞல், இந்நகரத்திற்கு, சேர்க்கப்பட்ட பாகங்களுடன் 30 ஆகார இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப் படுவார்கள்".

இப்போது மதராஸ் கவர்ன்மெண்டார் இது விஷயமாகச் செய்த எற்பாட்டை கவனிப்போம். சென்னையில் 1918-ம் வருஷத்தில் ஆகாரக் கலப்படத்தைத் தடுக்கும் சட்டம் (1918-ம் வருஷத்திய மதருஸ் ஆக்டு 3) பிறக்கப்பட்டது. இந்த சட்டம் 1875-ம் ஆண்டில் இங்கிலாந்தில் பிறந்த பழைய பிரயோஜனமற்ற சட்டத்தை அனுசரித்து எழுதப்பட்டது. இங்கிலாந்தைப்போலவே மதராஸிலும் சுமார் 12வருடகாலங்களாக இந்த சட்டம் அமுலுக்கு வரவில்லை. இந்த சட்டத்தில் அனேக குறைகளும் குற்றங்களும் இருந்ததைப்பற்றி, இதை நவீன சட்டத்திற்கு சமானமாகச் செய்யவும், இந்த சட்டம் பிரயோஜனப் படும்படியாகச் செய்யவும் வேண்டி அநேகதிருத்தச்சட்டங்கள்இடையிடையே கொண்டுவரப்பட்டன. கடைசியாக இந்தச் சட்டம் 1929-ம் ஹூ ஜூன் மீ 15உ யிலும் பின்னிட்டு தேதிகளிலும் அமுலுக்கு வந்தது. இந்த சட்டத்தில் சம்பந்தப்பட்ட ஊர்கள் பின் வருமாறு :—மதராஸ் கார்போரேஷன், உதகமண்டலம். கள்ளிக்கோட்டை, கொயம்பத்தூர், குண்டூர், காரைக்குடி, மதுரை, நெல்லூர், ராஜமஹேந்திரபுரம், திருச்சிராப்பள்ளி, விசாகப்பட்டணம், மேட்டுப்பாளையம் யூனியன், விருதுநகர், மங்களூர் முனிசிபாலிடிகள். 1924-ம் ஆண்டில் சர்க்கார் தரப்பில் பொது அனலிஸ்டு உத்தியோகஸ்தர் ஒருவரை நியமிக்கப்பட்டது. சென்ற வருஷத்தில் 98 மாதிரி சாமான்கள் மட்டும் பரிசோதிக்கப்பட்டன. அவற்றுள் 100-க்கு 24·5 கலப்படமாக ஏற்பட்டது. ஆனதுபற்றி இந்த சட்டத்தின் அமுலைக் குறித்து இப்போது யாதொரு அபிப்பிராயமும் சொல்ல முடியாது. ஆஞல், இந்த சட்டத்தை அமுலுக்கு கொண்டுவந்திருக்கும் ஊர்களின் ஜாப்தா முடிவானதல்லவென்றே சொல்லவேண்டும். அநேக ஆகார வஸ்துக்களின் உற்பத்தி ஸ்தானங்களை அதினின்றும் நீக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக கடப்பையிலிருந்து நெய் ஏராளமாய் சென்னைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடப்பையில் இந்த சட்டம் இன்னும் அமுலுக்கு வரவில்லை. ஆகாரக் கலப்படத்தை உற்பத்தி ஸ்தானத்திலேயே தடுத்துக் கண்டிக்கவேண்டும். இல்லேயல் சரியான பலனிராது.

இதைக் குறித்து மற்றோர் விஷயம் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது மாகாண அரசாங்கத்தாருடையவும், முனிசிபாலிடிகளுடையவும் பொறுப்பானது சட்டத்தைப் பிறப்பித்ததோடும், மீறிநடப்பவர்களை தண்டிப்பதோடும் ஒழியவில்லை. ஜனங்களுக்கு, உபயோகமற்ற கலப்பட வஸ்துக்களை அவர்கள் உண்பதிஞல் அவர்களது ஆரோக்கியத்திற்கு நேரிடும் அபாயத்தைக்குறித்து, துண்டுப் பிரசாரங்களிஞலும், அறிக்கைப் பத்திரங்களிஞலும் போதித்தல் வேண்டும். தவிர அவர்களை சர்க்காருடன் கலந்து ஒற்றுமைக்கும்படியாகவும் தப்பு செய்பவர்களை தண்டிக்கும்பொருட்டு அவர்களைக்காட்டிக் கொடுக்கும் படியாகவும் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். இந்த சட்டம் அமுலுக்குவரும் சமயத்திலேயே,போதஞ பிரசாரமும் எடுத்துக்கொண்டால், இந்த முக்கியமான சட்டம் நிறைவேறு.

வதற்கு அனுகூலமாகவிருக்கும். தவிர, பொது ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட ஆரோக்கிய சங்கங்களும் இதில் ஊக்கம் எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்குப் போதித்து, முனிசிபாலிட்டியார் ஆகாரக்கலப்படத்தை ஒழிக்கச்செய்யும் எத்தனங்களுக்கு வேண்டிய உதவி புரிவார் என்று நம்புகிறோம்.

ஆரோக்கிய தேவிக்குப் பிரார்த்தனை.

எம். வி. நரசிம்ம ராவ் பர்ஹாம்பூர்.

ஹே! ஆரோக்கியதேவி! சாந்தமான சரீரத்தில் சந்தோஷமான சித்தத்துடன் நான் உம்மைப் பிரார்த்திக்கிறேன். உமக்குச் சக்கரவர்த்தியையும் வெல்லச் சக்தியுண்டு. கேவலம் தௌர்ப்பாக்கியனை ஒரு ஏழைக்குடியானவனுக்கும் வெகுமதியளிக்க வல்லமையுண்டு, அநேகர் கணக்கற்ற தேவர்களையும் தேவிகளையும் தொழ நான் என் கண்களால் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர்கள் உம்மைமட்டும் வணங்குகிறதில்லை. நீர் அவர்களைவிட மேலான தெய்வம் என்று அவர்கள் அறிந்தாரில்லை. ஒரு தரம் உம்மைப் பிரார்த்தித்த மாத்திரத்திலே ஜனங்களுக்கு, ஜாதிபேதம், மதபேதம், கௌரவம், ஐசுவரியம் முதலிய பேதம் யாதுமின்றி வெகுமதி அளிக்கத்தக்கவள். அநேகர் உம்மை அடியோடு மறந்துவிட்டனர். நாளாவட்டத்தில் அவர்கள் செய்த குற்றத்திற்காக துக்கிக்கிறார்கள். பூமியில் ஓடும் அருவியிலுள்ள கற்கள்போல், அவ்வளவு தெளிவாய், நீர் உம்மைத்துதிப்போர்க்கு வெகுமதி அளிக்கும் தெய்வமென்று கண்டு கொண்டிருக்கிறேன். உமது அதிருப்திக்குப் பாத்திரனாகி உமது நிந்தைக்கு ஆளாயிருப்பவனை நீர் உதைத்துத் தள்ளுகிறீர். நீர் அகில கீர்த்திபெற்றவள். உமது கீர்த்தி எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உமக்கு விரோதமாகச் செய்யத் துணிவோன் ஐயமின்றியே இன்னலடைவான்.

இந்த அகண்ட பூமியே உமது கோயில். அதில் நீரே ஒரு விக்கிரகம். உமது ஆவி எங்கும் பரவியுள்ளது. நக்ஷத்திரங்களும் இயற்கைத் தோற்றங்களுமே உமது நிகரற்ற கோயிலை அலங்கரிக்கின்றன. உம்மைத் தொழுவோராகிய நாங்கள் உமது ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறோம். உமக்கு அடங்காத பேர்வழிகளை உமது ராஜ்ஜியத்தினின்றும் துரத்திவிடுவீர். உமக்குச் செய்யும் பிரார்த்தனையோ வெகு அற்புதமானது. அது உதடு அசங்கச்சொல்லும் பிரார்த்தனையன்று. கைகால் அசங்கச் செய்யும் பிரார்த்தனையாகும். நமது தேசத்திலுள்ள நோயை ஒழிக்கும் புண்ணிய தீர்த்தம் வெயர்வையாகும். நாங்கள் மனமார வணக்கத்துடன் உம்மைப் பிரார்த்தித்தால் எங்களுக்கு சந்தோஷகரமான வாழ்வை அளிக்கின்றீர். உமது மேன்மை அபாரம். உம்மைத் தொழுவோர் இயற்கை வழியில் நடந்து, சுத்த ஜலத்தைப் பருகி, நல்ல காற்றை சுவாஸித்து, சுவல்பமான ஆகாரத்தை உண்டால் அவர்களைக் காப்பாற்றுகிறீர். ஆனால் மேற்சொல்லிய அம்சங்கள் சுத்தமான நிலையில் கிடைப்பது துர்லபம். ஜனங்களின் சாமர்த்தியம் எவ்வளவு இருந்தபோதிலும், அவைகளை பரிசுத்தமான நிலையில் தங்களுக்குக் கிடைக்கும்படி செய்யமுடியவில்லை. ஆகாரம், ஜலம், காற்று இவைகளைப் போலவே சுறுசுறுப்பாய் தேகாப்பியாஸம் செய்வதும் அவசியம். வாஸ்தவத்தில், வியாயாமமே தொழுதல். உமது பாதம் எங்கள் சிரமேல் படுவதற்கு அதுவே மார்க்கம்.

உமது வழிகளோ அற்புதம். உமது கடாக்ஷ வீக்ஷியண்ணியத்தினால், ஜாலவித்தையின் உச்சாடனத்தைப் போல் நாங்கள் சுகமாக வாழ்கிறோம். உமது மௌனமான ஆசீர்வாதத்தை ஐசுவரியம், அதிகாரம் இவை ஒன்றினாலும் வாங்

கமுடியாது. காற்று, வெளிச்சம், உஷ்ணம் முதலியன உமது நேசர்கள். நீர் எங்களைக் கைவிட்டபோதுதான் யமதேவதை தமது கொடூரமான அதிகாரத்தை எங்களிடம் செலுத்துவார். பூலோகத்தின் மேலான சட்டத்தை நீரே ஒழுங்குபடுத்துகிறீர். ஜனங்களின் ஆசைகள் யாவும் உம்மையே பொருந்தி நிற்கின்றன. இப்பூலோகத்தில் பிரசித்திபெற்ற மகான்கள் யாவரும் உம்மைத் தொழுதே மேன்மையடைந்தனர். கொஞ்ச காலத்திற்கு முன் தேசாபிமானி ஒருவர், மேதாவி ஒருவர், கல்விமான் ஒருவர் உம்முடைய சுகந்த வாஸனை அவர்கள் மீது படாததினாலேயே, தங்கள் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய முடியாமற் போய்விட்டனர். தேகாப்பியாஸமோ, ஆத்ம அப்பியாஸமோ இவ்விரண்டும் கலந்தோ செய்வதே உம்மைத் தொழும் உபாயம் என்று நான் மேலும் மேலும் உறுதியாகச் சொல்லுவேன். உமது இஷ்டப்படி உம்மைத் துதித்து உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெற விரும்புகிறேன்.

'பெருவியாதி'

ஒரு நாடகம்.

டாக்டர். ஜி ரகுநாதராவ். டி.டி. எம், பீஹார் ஒரிஸ்ஸா பெருவியாதி ஆராய்ச்சி செய்யும் உத்தியோகஸ்த்தர், பூருலியா.

(தொகுதி 8. பகுதி 11. பக்கம் 222—லிருந்து தொடர்ச்சி).

அங்கம் 3, காக்ஷி 1. இடம்: 27, ஹைரோட் திருவல்லிக்கேணி. டாக்டர் ராமநாத், படித்துக்கொண்டிருக்கிறார். காலம். சாயங்காலம் 4 மணி.

ராமஸ்வாமியும் அவன் தகப்பனார் ராமானுஜமும் பிரவேசம்.

மிஸ்டர் ராமானுஜம்.—பிற்பகல் வந்தனம். டாக்டர்! உமது படிப்பை நான் தடை செய்யவில்லை என்று நினைக்கிறேன்.

டாக்டர் ராமநாத்.—வாசற்படிக்காகத் திரும்பிக்கொண்டு: கனவான்களே! உங்களுக்கு பிற்பகல் வந்தனம். உங்களுக்கு நல்வரவு. தயவுசெய்து உள்ளே வாருங்கள். உட்காருங்கள். (அவர் பக்கத்தில் இரண்டு நாற்காலிகளைப் போடுகிறார்).

மிஸ்டர் ராமானுஜம்.—தாங்கள் பீ. ஈ. எல். ஆர். ஏ அவர்களால் பிரசாரம் செய்யும்படி அனுப்பப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். பொது ஜனங்களுக்குத் தாங்கள் எக்ஸிபிஷன் ஹாலில் பிரசங்கங்கள் செய்ததாகவும் கேள்வி. பொது ஜனங்களும் தங்களுடைய அறிவைப்பற்றி மெச்சினதாகத் தோன்றுகிறது.

டாக்டர் ராமநாத்.—ஆம். ஐயா. நான் பெரு வியாதியைப்பற்றி ஜனங்களுக்கு பிரசங்கம் செய்யும்பொருட்டு பீ. ஈ. எல். ஆர். ஏ. அவர்களால் அனுப்பப்பட்டவன். ஜனங்கள் எனது முயற்சிகளை மெச்சுவதும் மெச்சாததும், உங்களுக்குத்தான் தெரியும். பொது ஜனங்களுக்கு எனது கடமையைச் செலுத்துவதில் எனக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் என்னை அவர்கள் மெச்சினாலும் கண்டனம் செய்தாலும் அதைக் குறித்து நான் கவனிக்க வேண்டியதவசியமில்லை. பொது ஜனங்களுக்கு மனமாற உழைப்பதில் எனக்கு உற்சாகம் உண்டு. என் உழைப்பின் பலன்களை பகவான் கையில் ஒப்பிவைத்திருக்கிறேன். அதுவே எனக்குப் போதுமான வெகுமதி.

மிஸ்டர் ராமானுஜம்.—நீர் ஒரு தத்துவ சாஸ்திரிபோலத் தோன்றுகிறதே. உம்மைப்போல் நல்ல படிப்புள்ள

யௌவன டாக்டருடைய சிநேகிதம் உண்டானது எனது பாக்கியம். நான் தங்களிடம் வந்த விஷயம் யாதெனில் (ராமசுவாமியைக் காண்பித்து), என் குமாரன் ஏதோ தன் இடது புஜத்தில் சிகப்பும் பழுப்பும் கலந்த வர்ணமுள்ள புண் இருப்பதைக்கண்டு 6 மாத காலமாய் மனதில் கலவரப் பட்டுக்கொண்டிருக்கிறான். அநேக டாக்டர்களை நான் ஆலோசித்தேன். அவற்றுள் ஒருவர் தாம் அது பெருவியாதி சம்பந்தம் என்று சொல்லத் துணிந்தார். ஆயுர்வேத வைத்தியர்களுக்குக் காண்பித்ததில் அநேகர் இது மேகநீர் சம்பந்தம் என்றும், அதிக விலையுள்ள மருந்துகள் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அவை ராஜாக்கள், ஜமீன்தார்கள் இவர்களுக்காகத் தயாரிக்கப் பட்டனவாம். சர்ம வியாதிகளில் தங்களுக்கு நிபுணத்துவம் உண்டென்று கேள்விப்பட்டு, தங்கள் அபிப்பிராயத்தைக்கேட்க தங்களிடம் வந்தேன்.

டாக்டர் ராமநாத்.—(ஒரு நிமிஷம் ராமசாமியை உற்றுநோக்கி, மிஸ்டர் ராமானுஜத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்). சரி; இந்த வாலிபரை எக்ஸிபிஷன் ஹாலில் நான் பார்த்திருக்கிறேன். இவர் எனது தொகுதியின் காக்ஷிகளில் மிகுந்த அக்கரை எடுத்துக்கொண்டு, எனது பிரசங்கங்களை மிகவும் கவனமாய்க் கேட்டார். என்னையும் ஒன்றிரண்டு கேள்விகள் கேட்டதாகவும் எனக்கு ஞாபகம் வருகிறது.'' (பிறகு ராமஸ்வாமியைப் பார்த்துச் சொல்லுகிறார்). வாலிபரே! என் கிட்டவாரும். உமது ஷர்டையும் பனியனையும் கழற்றும். அந்தப் புண்ணை நான் பார்க்கவேண்டும். (ராமஸ்வாமி) தனது ஷர்டையும் பனியனையும் சழற்றி, டாக்டருக்குத் தனது இடது புஜத்தைக்காண்பிக்கிறார்).

டாக்டர் ராமநாத்.—நல்ல வெளிச்சத்தில் அந்தப்புண்ணைப் பரீக்ஷித்துப் பார்த்து, தான் எழுதும் அட்டையிலிருந்து ஒரு துண்டு காகிதத்தைக் கிழித்து ராமஸ்வாமியின் கண்களை தனது இடது கையால் மூடி, அந்தத் துண்டுக் கடிதத்தை, தனது வலது கையில் வைத்துக் கொண்டு, ராமஸ்வாமியின் மார்பைத் தொட்டு, காகிதத்தினுல் தொடப்பட்ட இடம் எது என்று அவரைக் காண்பிக்கும்படி கேட்கிறார்). சற்றும் தாமதமின்றி ராமஸ்வாமி அந்த இடத்தைக் காண்பிக்கிறார். பிறகு டாக்டர் அதே காகிதத்தினுல் அவரது மார் கைகால்களிலும் 7.8. இடங்களில் தொட்டு பிறகு அதே காகித்தினுல் இடது புஜத்திலும் தொடுகிறார். அந்த இடத்தில் ராமஸ்வாமிக்கு யாதொரு உணர்ச்சியும் ஏற்படவில்லை. ஆகையால், டாக்டர் தொடும் இடத்தை காண்பிக்க முடியவில்லை. மறுபடியும் தொட்டுக் காண்பித்தும், ராமஸ்வாமிக்குச் சொல்ல முடியவில்லை. டாக்டர் சொல்வதையெல்லாம் மிஸ்டர் ராமானுஜம் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்.

டாக்டர் ராமநாத்.—(தனதுஇடதுகையை ராமஸ்வாமி கண்களை விட்டு நீக்கி, ராமஸ்வாமியின் இடது முழங்கையை தனது இடதுகையால் பிடித்து தனது வலதுகையின் முன் விரல்களால், அவனது புஜத்தின் உட்பக்கம், முழங்கைப் பூட்டுக்கு சற்று முன்னுல் உட்பக்கமாக ஏதோ தொட்டுபபார்க்கிறார். அதே சமயம், ராமஸ்வாமியின் முகக்குறிப்பையும் கவனிக்கிறார்). தனது வலதுகையின் முன் விரல்களால் டாக்டர் கிள்ளுகிறார், ராமஸ்வாமிக்கு நோவு எடுத்து "எனக்கு அங்கே நோகிறது. டாக்டர். அமுக்க வேண்டாம் என்று சொல்லுகிறார். டாக்டர், ராமஸ்வாமியின் முழங்கையை விட்டு விட்டு, அவரது தகப்பனுரைப் பார்த்து "உமக்கு எவ்வளவு அருவெறுப்பாயிருந்தபோதிலும் நான் நிஜத்தைச் சொல்லவேண்டுமே யென்று விசனிக்கிறேன். உமது குமாரருக்குப் "பெரு வியாதிதான்." ஆனுல் அது இப்போது தான் ஆரம்பம். குணமாகுமென்று நம்பிக்கையுண்டு. சில மாதங்கள் சிகிச்சை செய்யும் பக்ஷத்தில் சொஸ்தமாகலாம்.

மிஸ்டர் ராமானுஜம்.—(தனது கோபத்தை அடக்கிக்கொண்டு) எனது பிள்ளைக்கு பெருவியாதி எவ்வாறு வந்ததென்று எனக்கே ஆச்சரியமாகவிருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில், மூன்று பரம்பரையாய் எனது குடும்பத்தில் ஒருவருக்கும் சர்ம வியாதி வந்ததே கிடையாது. பெருவியாதி என்பது இல்லவே இல்லை.

டாக்டர் ராமநாத்.—ஐயா, எனக்கு மிகவும் விசனமாயிருக்கிறது. உமக்கு இது விஷயம் செவ்வையாய்த் தெரிந்திருக்குமென்று நினைத்தேன். உமது முன்னோர்கள் பெருவியாதியால் வருந்தியிருக்கவேண்டிய அவசியமேயில்லை. உமது பிள்ளைக்கு பெருவியாதி வந்ததற்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமில்லை. ஜனங்களின் நம்பிக்கை, பெருவியாதி பரம்பரையை யொட்டியதென்று இருந்தபோதிலும்கூட, பெருவியாதி பரம்பரையான வியாதியல்லவென்பது வைத்திய சாஸ்திரத் துணிபு.

மிஸ்டர் ராமானுஜம்—(ஆச்சரியத்துடன்) என்ன டாக்டர்வாள்! நூதனமான கோட்பாடுகளை எடுத்துரைக்கிறீர். கற்றறிவாளரின் தொன்று தொட்டு வழங்கும் அபிப்பிராயங்களுக்கு விரோதமாக நீர் எப்படிச் சொல்லலாம்.''

டாக்டர் ராமநாத்.—சாஸ்திரப்படி ஆராயிச்சிகள் செய்தும், படித்தும், அநேக திருஷ்டாந்தங்களில் பார்த்தும், சாஸ்திர நிபுணர்கள் ஜனங்களின் அபிப்பிராயம் தப்பென்று கண்டுபிடித்தால், படித்தவர்கள் ஏன் தங்கள் புராதனக் கோட்பாடுகளை விட்டு, வாஸ்தவத்தை தெரிந்து கொள்ளக்கூடாது.

மிஸ்டர் ராமானுஜம்.—நீர் சொல்லியது சரிதான் டாக்டர். சாஸ்திர நிபுணர்கள் இவ்வாறு கண்டுபிடித்திருக்கும் பக்ஷத்தில், பொது ஜனங்கள் நம்ப வேண்டுமே. ஆனுல் ஒரு சந்தேகம் டாக்டர். அதாவது பெருவியாதி பிடித்தவர்களின் பிள்ளைகளும், உறவினரும் ஏன் அவ்வியாதியால் வருந்த வேண்டும். ஆரோக்கியமாயிருப்பவர்களின் புத்திரர்களுக்கு ஏன் அந்த வியாதி வரக்கூடாது (என் பிள்ளையைத் தள்ளும்)

டாக்டர் ராமநாத்.—ஆமாம் நீர் கேட்ட கேள்வி முக்கியமான கேள்வியே. பெருவியாதி பிடித்தவர்களின் பிள்ளைகளுக்கும் பந்துக்களுக்கும் பெரு வியாதி தொத்துவதால், இந்த வியாதி பரம்பரையை ஒட்டிய வியாதி என்று ஒரு எண்ணம் உண்டாகிறது. ஆனுல் இவர்கள் பெருவியாதியுடனேயே பிறக்கவில்லை. அந்த வியாதி அவர்களை பிடிப்பதற்கு யாதொரு ஆஸ்பதமும் அவர்களிடம் கிடையாது. தொத்து சம்பந்தமுள்ள தம் பெற்றோர் உறவினருடனிருந்தே அவர்கள் இந்த வியாதியை சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். பெரு வியாதி பிடித்தவர்களுடன் நீண்ட சம்பந்தத்தினுலேயே இந்த வியாதி அவர்களைப் பீடிக்கிறது. குழந்தைகளுடைய சர்மம் மிகவும் மெலிது. இயற்கையாய் வியாதியைத் தடுக்கும் குணம் அவர்களிடம் கம்மி. ஆனதுபற்றியே அவர்கள் அந்த வியாதியை சுளுவில் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். தவிர உஷ்ணப் பிரதேசங்களில் குழந்தைகள் புழுக்களின் தொந்திரவால் வருந்துவார்கள். அதனுல் மூக்கு முதலிய இடங்களில் நமைச்சல் எடுக்கிறது. அதை நிறுத்த பிள்ளைகள் மூக்கைச் சொரிவார்கள். அதன் மூலமாயும் இந்த வியாதி மூக்குக்குள் கொண்டு போகப்படுகிறது.

மிஸ்டர் ராமானுஜம்.—ஆனுல் நீர் சொல்வதைப் பார்த்தால், பிள்ளைகளை, பெருவியாதி பிடித்த பெற்றோர்களை விட்டு நீக்கிவைத்தால், இந்த வியாதி அவர்களை அனுகாது என்று தோன்றுகிறதே.

டாக்டர் ராமநாத்.—ஆம். குழந்தை பிறந்தவுடன் எவ்வளவு சீக்கிரத்தில் அதைப் பிரித்து வைக்கிறீரோ அதைப் பொருந்தி நிற்கும். சீக்கிரம் பிரித்து விட்டால் வியாதி தொத்தாது. ஒரு தாய் பெருவியாதி பிடித்தவளாயிருந்து, குழந்தை பிறந்தவுடனே தாயையும் குழந்தையையும் பிரித்து விட்டால், அதற்கு அந்த வியாதி வராது. ஆனுல் அதன் ஆரோக்கியத்தை பாதுகாக்க வேண்டும்,

ஆனால் பொறுத்துப் பிரித்தாலோ, தொத்துசம்பந்தம் உண்டாவதற்கு வழிகள் உண்டு. தப்புவதும் கடினம்.

[டாக்டர் பெருவியாதிபிடித்த ஒரு தாயையும் அவளது ஐந்து குழந்தைகளையும் ஒரு போடோவில் பிடித்து வைத்திருப்பதை அவருக்குக் காண்பிக்கிறார். இந்த ஐந்து குழந்தைகளுக்கும் வியாதி தொத்திக் கொண்டிருக்கிறது. ராமானுஜமும் ராமஸ்வாமியும் அதைக்கவனமாய்ப் பாரார்க்கிறார்கள்.] டாக்டர் மேற்கொண்டு சொல்வதாவது: இந்தக் குழந்தைகளைப் பிறந்தவுடனே பிரித்து வைத்திருந்தால் இந்த வியாதி அவர்களுக்கு வந்திராது.

மிஸ்டர் ராமானுஜம்—(டாக்டரைப் பார்த்து) ஆனால் தொத்து சம்பந்தம் இருந்தால் போதுமென்கிறீர். பாரம்பரியம் அவசியமில்லையா?

டாக்டர் ராமநாத்—“ஆம் அதிக நாள் தொத்து சம்பந்தமிருந்தால், வியாதி காண்பதற்கு ஆஸ்பதம் அதிகம் உண்டு. பெருவியாதிக்கு, காலரா, இன்புளுயன்ஜா, பெரியம்மை முதலிவற்றைப் போல் அவ்வளவு தொத்துக் குணமில்லை. பொது ஜனங்களுக்கு இது தெரியாது. அதனால் இந்த வியாதி மிகவும் தொத்தென்று சொல்லி அதிகமாக அருவெருப்பு அடைகிறார்கள்.

மிஸ்டர் ராமானுஜம்.—அப்படியானால் இந்த வியாதி என் பையனுக்கு வரவேண்டிய காரணமென்ன? எங்கள் குடும்பத்தில் பெருவியாதி பிடித்தவர்கள் ஒருவருமே கிடையாதே.

டாக்டா ராமநாத்.—பெருவியாதி உண்டென்று அனுமானிக்கப்பட்ட வேலைக்காரன் உங்களிடம் எப்போதாகிலும் இருந்தானா? சர்மவியாதியால் வருந்திய வேலைக்காரன் ஒருவரும் உம்மிடத்தில் இல்லையா?

மிஸ்டர் ராமானுஜம்.—(சிறிது நேரம் தீர்க்க யோசனை செய்து). ஆமாம்; எங்களிடம் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவனை நாங்கள் பெருவியாதி பிடித்தவன் என்று சந்தேகிக்கவேயில்லை. பார்வைக்கு பலமுள்ளவனுயும் ஆரோக்கியமுள்ளவனுயு மிருந்தான்.

டாக்டர் ராமநாத்—அந்த வேலைக்காரன் புருஷ்ட பாகத்தில் இம்மாதிரி சிவப்புப் புண்கள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது உமக்குத் தெரியாதல்லவா. அப்படி நீர் அதைப் பார்த்திருந்தாலுங்கூட அது பெருவியாதியின் அறிகுறியென்று உமக்குத் தெரியாதல்லவா. 10—12 வருடங்களுக்கு முன் சில டாக்டர்கள் கூட அரம்பத்தில் பெருவியாதியைக் கண்டு பிடிப்பது கஷ்டம். உம்மைப் போலத்தவர்க்கு எப்படி முடியும்.

மிஸ்டர் ராமானுஜம்.—(ஒரு நிமிஷம் யோசித்து)—ஆம் டாக்டர். நீர் சொல்வது சரிதான். அந்த வேலைக்காரன் குஷ்டரோகியாயிருந்தாலும் கூட எனக்குத் தெரியாது. அவனுக்கு அடிக்கடி ஜலதோஷம் வருவதுண்டு. அது எனக்கு ஞாபகமிருக்கிறது. இந்த ஜல தோஷத்திற்காக அவன் பொடி போடுவதுண்டு.

டாக்டர் ராமநாத்.—இந்த ஜலதோஷம்தான் மூக்கில் இந்த வியாதி ஆரம்பமாயிருப்பதற்குக் காரணமாக விருக்கலாம். அவன் மூக்கில் இந்த வியாதியின் தோற்றம் இருந்திருக்கலாம்.

மிஸ்டர் ராமானுஜம்.—ஆனால் அந்த வேலைக்காரன் எனது குமாரத்திக்குக் கூட சிஷ்ருஷை செய்து கொண்டிருந்தான். அவள் இந்தப் பையனைவிட 6 வருடம் சின்னவள். அவளுக்கு இந்த வியாதி காணவில்லை. அவள் ஆரோக்கியமாகவே இருக்கிறாள்.

டாக்டர் ராமநாத்.—இந்தப் புண் கிளம்புமுன் உமது குமாரன் வேறு எந்த வியாதியாலாகிலும் வருந்தினானா?

மிஸ்டர் ராமானுஜம்.—(தீர்க்கமாய் யோசித்து) டாக்டரைப் பார்த்து, இந்தப்புண் கிளம்புவதற்கு மூன்று மாதங்களுக்கு முன் இரண்டு வாரகாலம் மலேரியா ஜுரத்தினால் வருந்தினான். எங்கள் குடும்ப வைத்தியர் சிகிச்சை செய்தார். சில நாட்களில் ஜுரம் நின்றுவிட்டது.

டாக்டர் ராமநாத்: சரி. அந்த மலேரியா ஜுரம்தான். அவனை இளைக்கச்செய்தது. தேகத்தில் அப்போது பதுங்கியிருந்த குஷ்டரோகக் கிருமிகள் விருத்தியாகி, அதன் முதற்குறிகளை வெளிக்காட்டின.

மிஸ்டர் ராமானுஜம்.—ஆமாம், டாக்டர். நீர் சொல்வது சரிதான். அந்த ஜுரத்தினால் அவன் இளைத்துப்போனது வாஸ்தவம் தான். இப்போது பையனுக்கு சிகிச்சை எப்படி? பையனை உமது பாதுகாப்பில் ஒப்புவித்துவிட்டேன். நீர் செய்யும் ஒத்தாசைக்கு போதுமான சன்மானம் செய்ய எனக்குச் சக்தியில்லை. உமக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

டாக்டர் ராமநாத்: நான் உமது பையனுக்கு சிகிச்சை செய்ய ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த ராஜதானி முழுதிலும் சுற்றி அங்கங்கே பிரசாரத் தொழில் நடத்தவேண்டியிருக்கிறது.

நான் வெகுநாள் சென்னையில் இருக்கமுடியாது. ஆனதுபற்றி ராயப்பேட்டையில் இருக்கும் டாக்டர் ஸ்ரீனிவாஸனைக்கொண்டு உமது குமாரனுக்கு சிகிச்சை செய்துகொள்வது நலம். குஷ்டரோகத்தைக் குறித்து அவருக்கு ஞானம் உண்டு. அவர் தமது வியாதிஸ்தர்களிடம் மிகவும் பக்ஷமாயிருக்கிறார். உமது குமாரனுக்குச் சிகிச்சைசெய்ய அவர்தான் தகுந்தவர். நான் சொல்லுகிறபடி செய்ய சம்மதித்தால் அவருக்கு இப்போதே டெலிபோன் செய்கிறேன்.

மிஸ்டர் ராமானுஜம்: சரிதான், டாக்டர் உமக்குச் சம்மதமானால் தயவு செய்து டெலிபோன் செய்யும்.

டாக்டர் ராமநாத்: (மணியை அடித்து) ஹல்லோ. 2738 மாட்டுங்கள். (மணி அடிக்கிறது) டாக்டர் ராமநாத் இயந்திரத்தைக் காதில் வைத்துக்கொண்டு, ஹல்லோ! 2738 நெம்பரா? யார் பேசுகிறது.? டாக்டர் ஸ்ரீனிவாஸன், உமக்குப் பிற்பகல் வந்தனம். நான்தான் ராமநாத் பேசுகிறது. சிந்தாதிரிப்பேட்டை ஜவுளி வியாபாரம் மிஸ்டர் ராமானுஜம் குமாரன் ஏ 1 கேஸ். உம்மிடம் சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமாம். மற்றது நேரில் பேசிக்கொள்ளலாம். சில நிமிஷங்களுக்கெல்லாம் மிஸ்டர் ராமானுஜம் உம்மிடம் வருவார். காத்திரும். சாயங்கால வந்தனம். (இயந்திரத்தை கீழே தொங்க விடுகிறார்).

(மிஸ்டர் ராமானுஜனைப்பார்த்து) சரி. உமக்காக அவர் காத்துக்கொண்டிருப்பார். சாயங்காலம் 6 மணி வரைக்கும் அவருடைய ஆஸ்பத்திரியில் அவரைக் காணலாம். நான் சென்னைப்பட்டணம் வரும்போதெல்லாம் உமது குமாரனைப் பார்த்து, மேற்கொண்டு என்னென்ன சொல்லவேண்டுமோ அதை டாக்டர் ஸ்ரீனிவாஸனுக்குத் தெரிவிக்கிறேன். உமது பையன் க்ஷேமத்தை நான் எப்போதும் கோருகிறேன். சம்மதமா!”

மிஸ்டர் ராமானுஜம்: டாக்டர். உங்களுக்கு அநேக வந்தனம். நாங்கள் உங்களுக்கு எவ்வளவோ கடமைப் பட்டிருக்கிறோம். நமஸ்காரம்!

மிஸ்டர் ராமானுஜமும், ராமஸ்வாமியும் போகிறார்கள்.

(அங்கம் 3. காக்ஷி 2).

மிஸ்டர் ராமானுஜமும், ராமஸ்வாமியும் பிரவேசம்.

டாக்டர் அவர்கள் மாலை வந்தனம்.

டாக்டர் சீனிவாஸன்: கனவான்களே. உங்களுக்கு மாலை வந்தனம். டாக்டர் ராமநாத் இடமிருந்து வருகிறீர் என்று நம்புகிறேன்.

மிஸ்டர் ராமானுஜம்: ஆம். டாக்டர். (ராமஸ்வாமியைக்காட்டி) இவன் தான் எனது குமாரன். இவனுக்குத்தான் சிகிச்சை செய்யவேண்டும்.

டாக்டர் ஸ்ரீனிவான்: (பையனைப் பார்த்து). கிட்ட வா, அப்பா. பயப்படாதே. அந்த வியாதியின் குறிகள் என்னென்ன இருக்கின்றன பார்ப்போம்.

ராமஸ்வாமி: (தனது ஷர்டையும் பனியனையும் கழற்றி, தனதுவலது புஜத்

திலுள்ள புண்ணை டாக்டருக்குக் காண்பித்து அங்கே தனக்கு யாதொரு உணர்ச்சியும் இல்லை யென்று தெரிவிக்கிறான்).

டாக்டர் ஸ்ரீனிவாஸன்: சரி. போதும். ஷர்டைப் போட்டுக்கொள். டாக்டர் ராமநாத் உம்மைப்பற்றி எல்லாம் சொல்லியிருக்கிறார். (தகப்பனாரைப் பார்த்து). ஆம். உமது பையனுக்கு சிகிச்சை செய்யவேண்டும். என்னால் கூடியதைச் செய்கிறேன். அவர் என்னுடன் ஒற்றுமைத்து நான் சொல்லுகிறபடி சில ஆரோக்கிய விதிகளை அனுசரிக்க வேண்டும். இந்த வியாதி இப்போதுதான் ஆரம்பமாதலால் பூர்ணமாய் சொஸ்தமாகும். பயமில்லை'.

ராமஸ்வாமி: தாங்கள் இப்போது சொல்லிய ஆரோக்கிய விதிகளை டாக்டர் ராமநாதின் பிரசங்கங்களிலிருந்து தெரிந்துகொண்டேன். அவ்வளவு மட்டுமோ? இன்னும் அனுசரிக்கவேண்டிய புது முறைகள் ஏதாகிலும் உண்டா?

டாக்டர் ஸ்ரீனிவான்: ஓகோ! இந்த சிகிச்சையில் நீர் கவனித்துச் செய்யவேண்டிய முறைகள் யாவும் உமக்கு ஏற்கனவே தெரியும்போலிருக்கிறது. சரிதான். ரொம்பவும் சந்தோஷம். இந்த வியாதியை நிவர்த்தி செய்துகொள்ள உமக்குள்ள ஆசைக்கு இது ஒரு அடையாளம். என்னிடம் வரும் வியாதிஸ்தர்கள் யாவரும் உம்மைப்போல் இருக்க விரும்புகிறேன். உமக்கு என்னதெரியும்? சொல்லும், பார்ப்போம்.'

ராமஸ்வாமி:—சுருங்கச் சொல்லுமளவில், பெரு வியாதியை ஒழிக்க விரும்புபவன் கவனிக்கவேண்டிய விதிகள் பின்வருமாறு :—

(i) ஆகாரம்—சாதாரணமானதாயும், போஷணை குணமுள்ளதாயும், போதுமானதாயும், சரியான விகிதாசாரம் உள்ளதாயுமிருக்கவேண்டும்.

(ii) வியாயாமம்—வேண்டியளவு சரியான வியாயாமம் செய்யவேண்டும்.

(iii) சர்மம், உடை, சுற்றுப்பக்கங்கள் சுத்தமானதா யிருக்கவேண்டும்.

(iv) வேறு வியாதிகள் இல்லாமலும் தப்பு வழிகளில் நடவாமலுமிருக்கவேண்டும்.

(v) மனது—நல்ல வழியில் நின்று, ரம்மியமான எண்ணங்களை எண்ணி, வியாகூலமின்றி இருக்கவேண்டும்.

(vi) ஏதாகிலும் வேறு வியாதி கண்டாலும், முறைதப்பி நடந்தாலும் உடனே சிகிச்சை."

டாக்டர் ஸ்ரீனிவாஸன்:—சரி. ரொம்ப சுருக்கமாயும் நன்றாகவும் சொன்னாய். சந்தோஷம். இந்த விதிகள்படி நடக்கும் பக்ஷத்தில், சொஸ்தமாவதில் சந்தேகமில்லை. ('பிறகு தகப்பனாரைப் பார்த்து)". உமது குமாரன் மிகவும் கெட்டிக்காரன். சீக்கிரம் வியாதி சொஸ்தமாய்விடும். நாளை முதல், நான் மருந்து குத்தி யேற்றுகிறேன். வாரத்திற்கிரு முறை நீர் அவரை என்னிடம் அனுப்பும்.

மிஸ்டர் ராமானுஜம்:—உமது இஷ்டப்படியே செய்கிறேன். அவனை உமது பிள்ளையாகவே பாவித்து சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும். நான் என்ன வெகுமானம் செய்தபோதிலும் என் குழந்தைக்கு புதிதாய் பிராணனை உண்டு பண்ணுவதற்கு நீர் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு அது ஈடாகாது. எங்கள் ஆயுட் பரியந்தம் நாங்கள் இருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

டாக்டர் ஸ்ரீனிவாஸன்:—கனவான்களே! என்னை மன்னிக்கவேண்டும். நான் என் தொழிலின் கடமையைச் செலுத்துகிறேனே யொழிய வேறல்ல. அதற்காக எனக்கு இவ்வளவு உபசாரம் வேண்டியதில்லை. அதற்கு நான் அருகனுமல்ல. உமது குமாரன் சீக்கிரத்தில் சொஸ்தமடைவான் என நான் நம்புகிறேன்.

மிஸ்டர் ராமானுஜம்:—சரி. அது தான் எனது பிரார்த்தனை. டாக்டர், நான் போய்வருகிறேன். வந்தனம். (ராமஸ்வாமியும் ராமானுஜனும் போகிறார்கள்.)

அங்கம் 3. காக்ஷி 3 (கடைசி காக்ஷி).

இடம். ராமஸ்வாமியின் வீடு. காலம். 9 மணி,

(ராமஸ்வாமி ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டிருக்கிறான்).

"ஹேகடவுளே! இவ்வகிலம் நீர் திருவிளையாடற் செய்யுமிடம்.
ஒதுங்கி ஒதுங்கிப்போகும் கான்ஸென்டிரிக் சர்கில்போல்,
உம்மைச் சுற்றி சுற்றி நாங்கள் ஏழைமாந்தர் அறிவின்றி உழல்கின்றோம்.
உம்மை ஒருபோதும் கண்டோமில்லை.
உமது சர்வஞ்ஞஸ்வரூபத்தை பார்த்ததில்லை."

(கோபாலன் பிரவேசிக்கிறான்) சபாஷ்! நூதனமாய் கிளம்பிய ஒரு ரவீந்தரநாத் டாகூர் ஆகிவிட்டனையே.

ராமஸ்வாமி.—கோபால் நீ காலத்திற்கேற்ற விகடன்!! வா அப்பா.

கோபால்.—அப்பா! என்ன இன்று இவ்வளவு ஆனந்தமாயிருக்கிறாய். உமது கன்னங்களில் ஆரோக்கியம் ததும்பிப் பிரகாசிக்கின்றது என்ன ராமா! ஏதாகிலும் சஞ்சீவி மருந்து சாப்பிட்டாயா? இளமையைக் கொடுக்கும் தாது புஷ்டி மருந்து குடித்தாயா?

ராமஸ்வாமி.—அது ஒன்றுமில்லை. கோபால். நான் நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். நான் சென்ற எட்டு மாதங்களாக சில ஆரோக்கிய விதிகளை அனுசரித்து ஆரோக்கியமான வாழ்வு வாழ்ந்து வந்தேன். அதுதான்; வேறொன்றுமில்லை. எனக்கு அந்த கெட்ட வியாதி பற்றற ஒழிந்துவிட்டது. பொதுவாக எனது ஆரோக்கியம் விருத்தியா யிருக்கிறது பார்".

கோபால்.—ஆமாம். நீ சொல்வது சரிதான். நீ ஆரோக்கியமாய் உற்சாகத்துடன் இருப்பதில் நீ என்னுடன் போட்டி போட்டு கெலிப்பாய் என்று நம்புகிறேன்.

ராமஸ்வாமி.—போட்டி போடுவதேன்! உனக்கு மிஞ்சியே இருப்பேன். வைத்திய சாஸ்திரத்தின் மேன்மை இதுவன்றோ!

கோபால்.—ஆமாம். நாம் ஒன்றுகூடி எல்லாம்வல்ல கடவுளுக்கு வந்தனம் அளித்து மனமார அவரை வேண்டிக் கொள்வோம்.

(இருவரும் ஒன்றாகப் பாடுகிறார்கள்).

(1) ஆயிரம் நாபடைத்த ஆதிசேடனாலும்
அரைதற்கு முடியா உம் சீரை
ஏழைகள் நாம் எவ்விதம் வர்ணிப்போம்.
உம்மைத்துதிப்போம், துதிப்போம், துதிப்போம்.

(2) உம்மைத்துதிக்கவும் தக்க வார்த்தையைக் காண்கிலேன்
என் நெஞ்மெல்லாம் சோதித்தும் என் வாய்க்கது வரவில்லை.
என் நாவே! என் ஏழை நாவே! என் இழிவான நாவே!
அவரது மகிமையைப் பாடேன்; சற்று பாடேன்.

(3) மனிதரை நீ முகஸ்துதி செய்வாய்
அவர் யாது செய்தாலும் பாராய்
பகவான் முன் மௌனமாய் நிற்பாய்
ஒரு பதமேனும் அவர் முன் செப்பாய்.

(4) அவர்மேல் பக்ஷம் வைக்கின் கிடைக்குமே மோக்ஷம்
அவருக்கு எப்போதும் கிடையாது பக்ஷபாதம்.
கல்லுக்கும் புழுவிற்கும் கிடைக்குமே சற்கதி
அவரைச் சரணடைந்தோர்க்கு வருமே நற்பதவி.

சில அநுபோகங்கள்.

டாக்டர் டி. பி. சுந்தரம், எல். எம். எஸ். ரெஸிடெண்டு ஹவுஸ் ஸர்ஜன்,
கண்ணாஸ்பத்திரி, எழும்பூர், மதராஸ்.

படுப்பதற்குச் சரியான நிலை.

படுப்பதற்குச் சரியான நிலை ஏதாகிலும் உண்டா? அதனால் ஏதாகிலும் நன்மைகள் உண்டா? இந்த இரண்டு பிரச்சனைகளும் நெடுநாள் வாக்குவாதத்திற்குறிய பிரச்சனைகளாகவிருந்தன. மூன்று வருடங்களாக என்னுடைய அனுபோகத்தைச் சொல்லப்புகின், இடது பக்கமாகப் படுத்துறங்குவதே சிலாக்கியம் என்று தோன்றுகிறது. இந்த நிலையில் தன் தேகத்திலுள்ள எல்லா பூட்டுகளும் ஒருங்கே வளைப்பதற்கும் அதனால் எவ்வளவு சுகம் உண்டாகக்கூடுமோ அவ்வளவு சுகம் உண்டாவதற்கும், எல்லா சதைகளும் நீள்வதற்கும் ஆஸ்பதம் உண்டு. கர்பத்தில் எப்படியானால் சிசுவிற்கு ஒருங்கே வளையும் நிலை ஏற்படுகிறதோ அதை ஏறக்குறைய இது ஒத்திருக்கும். வலதுபக்கமாகப் படுப்பதிலும் பாதகமில்லை. அதுவும் நல்லதுதான். ஆனால் இதைவிட முன்சொல்லிய நிலையில் அனுகூலங்கள் அதிகம். அதைப்பற்றி நாம் இங்கு விவரித்துச் சொல்ல முடியாது. இந்த நிலையில் முக்கியமாய் நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டியது யாதெனில் இது மலச்சிக்கலை உண்டுபண்ணாது. அதை நிவர்த்தி செய்யும். வலது பக்கத்திலுள்ள பெருங்குடலின் ஆரம்பத்தில் மலம் தங்கவொட்டாமல் தடுக்கும். ஆகர்ஷண சக்தி இங்கும் உண்டு. அதனால் உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்திற்கு மலம் தனது இயற்கை வழியாக தள்ளப்படுவதற்கு ஹேதுவுண்டு.

ஜலதோஷத்திற்குச் சிகிச்சை.

தேகத்தில் கொஞ்சம் அசௌக்கியம் தட்டினால் உடனே அதற்குச் சிகிச்சை செய்து அதை ஆரம்பித்திலேயே ஒழிக்க முயலவேண்டும். தலையில் ஜலதோஷம் பிடித்துக்கொண்டு மூக்கு அடைபட்டுப் போகும் என்கிற விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. பிறகு தும்மலும் மூக்கில் சளி கொட்டுவதும் ஆரம்பிக்கிறது. இதற்கு நான் சொல்லப் போகிற சிகிச்சையை ஒவ்வொரு வாலிபரும் செய்து கொள்ளலாம். அதாவது யாதாகிலுமொரு வலுத்த வியாயாமம் செய்வதே. உதாரணமாக, ஜலதோஷம் பிடித்ததென்று தெரிந்தவுடனே வேகமாய் சைகல் சவாரிசெய்தல் அல்லது சுறுசுறுப்பாய் நடத்தல் முதலிய அப்பியாஸங்களைச் செய்வதே. அதனால் வெயர்வை அதிகம் விட்டு, நல்ல உஷ்ணமான காற்று உட்புகும்படி செய்து, மூக்கின் சளி ஜவ்வில் அடைப்பட்டிருப்பது நீங்கிவிடும். அதிகம் வெந்நீர் பருகுவதாலும், ஒரு அடுப்பண்டை யிருக்கும் உஷ்ணமான காற்றை உட்கொள்வதினாலும் நன்மை உண்டு.

பற்களைச் சுத்தமாய் வைத்தல்.

ஒரு துண்டு தேங்காய் பத்தையை எடுத்து இராப்போஜனம் ஆனவுடன் நன்றாய் மென்றால் பற்களின் இடையிலுள்ள ஆகாரத்துண்டுகளை அது எடுத்து விடும். அந்த ரஸத்தையும் ஆகாரத் துண்டுகளோடு விழுங்கிவிட்டு, திப்பியை நாக்கின் நுனியால் வாயிலும் பற்களினிடையிலும் சுழற்ற வேண்டும். சிறிது நேரம் கழித்து அதை உமிழ்ந்துவிட்டு, ஜலத்தைக்கொண்டு வாயைச் செவ்வையாய்க் கொப்புளிக்க வேண்டியது. இரவில் வாய் நாற்றம் எடுக்காது. தினம் செய்தால் பற்களில் காரைகட்டிக்கொள்ளாது.

வெளிககாற்றில் உறங்குவது.

சென்னையில் காலையில் எழுந்தவுடனே தேகம் பலஹீனமாக விருக்கிறதென்று எனது சிநேகிதர்கள் அநேகர் சொல்லு

கிறார்கள். நாட்டுபுறங்களில் இவ்வாறு இருப்பதில்லை. அதற்கு நான் பதில் சொல்வது, அவர்கள் அறைக்குள் படுத்துறங்குவதினால் இது உண்டாகிறதென்றும், நான் செய்கிறமாதிரி வெளிக்காற்றில் படுத்துறங்கினால் அம்மாதிரி உண்டாகாது என்பதே. உனது தேகத்திலுள்ள கணக்கற்ற ஸெல்லுகளுக்குப் போதுமான பிராண வாயுவு இல்லாததாலே இது உண்டாகிறது.

போதுமான ஜலம் பருகுங்கள்.

'தேகத்திற்கு ஜலம் அவசியம் என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் தேகத்தின் எடையில் நான்கில்

I

II

I-II—பூனா கார்வி காலேஜி பெண்பிள்ளைகள் தேகப்பயிற்சி செய்கிறார்கள்.

மூன்று பங்கு ஜலம். அநேகர் தாம் குடிக்கவேண்டிய அளவைவிடக் கம்மியாகவே குடிக்கிறார்கள். தேகத்திலுள்ள ஜலம் வறண்டு போனால்தான் தாகம் எடுக்கிறது. தாகத்தை தணிப்பதற்குமட்டும் ஜலம் பருகினால் போதாது. தேகத்தின் ஜலம் சதா சம அளவில் இருக்கவேண்டும். தினம் 50,60 அவுன்ஸ் ஜலம் சாப்பிட்டால்தான் இது சாத்தியப்படும். அப்போதைக்கப்போது ஒரு கோப்பை விகிதம் பகலில் சாப்பிட்டுக் கொண்டு வந்தால் இந்த அளவுக்கு வந்துவிடும். வறண்டு கோடு கோடாய் காணப்படும் சர்மம், பொட், பொட் என்றிடிக்கும் தலைவலி, மலம் கெட்டியாய்ப் போதல், நாக்கில் அழுக்கு படிதல், சிறுநீர் வரும்போது, சங்கடம் இவை யாவும் தேகத்தில் தண்ணீர் இல்லாதிருப்பதற்கு அறிகுறியாகும்.

(இன்னும் வரும்.)

மில்லிக் கொசுவின் ஆச்சரியமான வீரச்செயல்கள்

மிஸ்ஸர்ஸ் க்ளுயிஸ்.

தினம் விடாமல் வெகு நாள் மழை பெய்ந்து கொண்டிருந்தது. தந்தைக் கொசு, தாய்க் கொசு, அவற்றின் பெண்ணாகிய மில்லிக் கொசு ஆகிய இவை மூன்றும் கிராமத்திற்குப் பின்புறமுள்ள குட்டையில் ஆனந்தமாய்க் காலங் கழித்து வந்தன. குட்டை, மழை, இருட்டு இவைகளின் மேல் அவைகளுக்கு மிகப் பிரியம். அங்கே இவை மூன்றும் அவைகளுக்கு கிடைத்திருந்தன. அந்தக் குட்டையின் ஓரத்தில் ஒரு அடர்ந்த புதர் உண்டு. சூரிய வெளிச்சம் நுழையவே நுழையாது.

உடனே தாய்க் கொசு தன் கணவனைப் பார்த்துச் சொன்னதாவது "இதோ பார், எனது நூதன குடும்பத்தை; இவை இப்போது பெரிதாய்விட்டன. ஜலத்தில் தாங்களே சுற்றிக்கொண்டு வருகின்றன பார்?

தந்தைக் கொசு, 'உய்' என்று ஒரு உருமல் உருமிவிட்டு பின்னர் அதைக் குறித்து சட்டை செய்யாமலே இருந்து விட்டது. அதற்கு இந்தக் குடும்பத்தின் பேரில் அவ்வளவு அக்கரையில்லை. ஆனால் மில்லிக் கொசுவோ சுற்றிவரும் குட்டிக் கொசுக்களைப் பார்த்து "நானும் ஒரு காலத்தில் இவ்வாறு இருந்தேனா?" என்று தன் தாயைக் கேட்டது.

அதற்குத் தாய்க் கொசு, "ஆமாம்; நீ கூட ஒரு காலத்தில் இவ்வாறு விளையாடிக் கொண்டிருந்தாய். உன் தகப்பனாரும் அவ்வாறு இருந்தார்" என்று சொல்லிற்று. ஆனால் தந்தைக் கொசு மறுபடியும் நன்றாய் உறங்கிவிட்டது. அதற்குக் காது கேட்கவில்லை.

மில்லிக் கொசு "அம்மா! அம்மா! என்று கூவிற்று. தாய்க் கொசு அதைக் கவனியாமல், தனது நூதன குடும்பத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தது.

மறுபடியும், அம்மா, அம்மா, என்று கூப்பிட்டு "நான் ஏன் இம்மாதிரி தண்ணீரில் சுற்றிவரக்கூடாது? என்று மில்லி தன் தாயைக் கேட்டது.

என் செல்வக் குழந்தாய், "நீ நன்றாய் வளர்ந்து பெரிய கொசுவாகி விட்டாய், உனக்குப் பறக்க இறக்கைகள் உண்டு" என்று தாய்க்கொசு சொல்லிற்று.

"'சரி' எனக்கென்னமோ அவைகளைப் போலவே இந்தமண் குட்டையில் சுற்றி விளையாட ஆவலாயிருக்கிறது" என்று மில்லி சொல்லிற்று.

அதற்குத் தாய் ஆஹா! நீ இப்போது பறக்க ஆரம்பித்து விட்டபடியால் இதை விட அநேக வேடிக்கையெல்லாம் காணப் போகிறாய். கேள்! நான் இன்றிரவு உன்னை கிராமத்துக்குள் அழைத்துக் கொண்டுபோய், கொசு பார்க்கவேண்டிய விசித்திரங்களையெல்லாம் காட்டுகிறேன்" என்றது.

ஆஹா! உடனே புறப்படலாமா? என்று மில்லி கூச்சலிட்டது.

"இல்லை இல்லை. நாம் இருட்டாகிறவரைக்கும் காத்திருக்கவேண்டும். இப்போது உறங்கப்போ. இரவெல்லாம் விழித்துக் கொண்டிருக்கவேண்டியிருக்கும்" என்று தாய் சொல்லிற்று. அப்படியே மில்லிக்கொசு ஒரு இலையின் கீழ் படுத்துக் கொண்டது. ஆனால் அதற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ராத்திரி நமக்கு என்னென்னவேடிக்கைகள் இருக்கின்றனவோ என்று அதே சிந்தனையாயிருந்தது. முதல் முதல் ஒரு சிறு முட்டையாய் குட்டைத் தண்ணீரில் நான் மிதந்துகொண்டிருந்ததாக அம்மா சொன்னாள். அது எனக்கு ஞாபகமில்லை. 3 வாரங்களுக்கு முன் நடந்த விஷயம் யாருக்குத்தான் ஞாபகமிருக்கும்? பிறகு நான் வளர்ந்து, ஒரு சிறு புழுமாதிரி இருந்தேனாம். அதுவும் எனக்கு ஞாபகமில்லை. பிறகு நான் உருண்டை வடிவமாகி இப்போது என் சகோதர சகோதரிகள் செய்வதுபோல் தண்ணீரில் சுற்றிச் சுற்றி விளையாடிக்கொண்டிருந்தேனாம். சில நாட்களுக்குப் பிறகு, எனது தேகம் வெடித்து, எப்படியோ புது தேகம் எடுத்து நானே நகர்ந்து, பழைய தேகத்தின் காலி ஓட்டில் மிதந்துகொண்டிருந்தேனாம். பிறகு எனக்கு இரண்டு இறக்கைகள் இருந்ததாகவும், பறக்கக்கூடுமென்றும் தெரிந்துகொண்டு, தண்ணீரை விட்டு, புதரின் கீழ் வசிக்க ஆரம்பித்தேனாம்.

என்றிவ்வாறு மில்லி படுத்துக் கொண்டே, கனாக்கண்டு ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தது. இந்த சமயத்தில் தாயார் அதை எழுப்பி, "குழந்தாய், எழுந்திரு. பூலோகத்தை உனக்குக் காண்பிக்கிறேன், வா. என்று கூப்பிட்டது.

"அண்ணாகூட வருகிறாரா. நான் அவரைப்போய் எழுப்பட்டுமா?" என்று மில்லி கேட்டது.

'இல்லை. உன் தகப்பனார் கடிக்கமாட்டார். பெண் கொசுக்கள் தாம் கடிக்கக் கூடியவை. அவரை இங்கேயே விட்டு விட்டு நாம்போகலாம் வா,' என்று தாய்க் கொசு சொல்லிற்று.

ஒரு சுகாதாரமற்ற குட்டை. இதன் ஜலம் துணி தோய்ப்பதற்கும் குடிப்பதற்கும் உபயோகப்படுத்தப் படுகிறது. இது கெடுதல். மலேரியா கொசுக்கள் விருத்தியடைவதற்கு இது ஏற்ற இடம்.

மில்லி தன் இறக்கைகளை விரித்து ஈரமும் உஷ்ணமும் கலந்த ஆகாய மார்க்கமாய் தன் தாயின் பின்னே பறந்து போயிற்று. அவை வெதூரம் பறந்தன. அம்மாதிரி மில்லிக்குத் தோன்றியது. ஆனால் வாஸ்தவத்தில் ஒரு சிறு வயலைத் தாண்டித்தான் போயிற்று. கிராமத்தைச் சேர்ந்தவுடன், தாய்க்கொசு நேராகப் பறக்காமல் அங்குமிங்கும் சுற்றிச்சுற்றி வளையமிட்டுக் கொண்டிருந்தது. மில்லிக்கு அதனால் தலைசுற்றல் உண்டாகி தாயைப்பார்த்து 'அம்மா, நில், என் இறக்கைகள் உமது இறக்கைகளைப்போல அவ்வளவு உறத்தனவல்ல. அவற்றிற்கு நோவெடுக்கின்றன.' என்று சொல்லிற்று.

தாய்க்கொசுவானது "சரி, ஆனால் அந்த சுவற்றின் மேல் உட்காருவோம்,

பிறகு என்ன செய்கிறதென்பதைச் சொல்லுகிறேன்" என்று சொல்லிற்று.

இப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போது, 'பஜ்' என்று ஒரு சப்தம் கிளம்பிற்று. ஒரு விநோதமான கொசு அருகில் பறந்து வந்தது.

அம்மா! அதோ பார். அவள் யார். அவள் நமக்கு உறவா? என்று மில்லி கேட்டது.

தாய்க்கொசு ஹூம் ஹூம் என்று உறுமி, 'அவள் நமக்குத் தூரபந்து' என்று பதிலளித்தது. 'அவள் நம்மிட குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல. அவள் சாதாரண கொசு, பார். அவள் பெரியதாயும் பார்வைக்கு அவலக்ஷணமாயும் இருக்கிறாள். அவள் இறகுகளில் வெள்ளைப் புள்ளிகள் இல்லை. மேலும் நம்மைப்போல் அவள் தேகத்தின் பின் பாகத்தை உயர்த்தி உட்காரமுடியாது. அவளைக் கவனித்துப்பார். உனக்குத் தெரியும். அந்தப்படிமேல் அவள் உட்காருவதைப்பார்.'

'அவள் செய்த சப்தம் ரொம்பவும் விநோதமாயிருந்தது. அவளைப்போல் நான் கூச்சல்போட முடியவில்லையே' என்று மில்லி சொல்லிற்று.

"இல்லை. அவள் பாஷை நமக்குத் தெரியாது". என்று தாய்க்கொசு சொல்லி, மேலும் சொன்னதாவது, "அவ்வளவு உறத்தப்பேசுவது முட்டாள்தனமல்லவா, அவள் வருவதை ஜனங்கள் கேட்டு, அவளைப் பிடிக்க முயலார்களா?

மில்லி இதைப்பற்றி யோசித்தது. தனக்கு மட்டும் சப்தம் போடவேண்டுமென்கிற எண்ணம் உண்டு. ஆகிலும் கூச்சல் போடாமல் பறப்பது உசிதமென்று நினைத்தது. இப்படியிருக்க திடீரென்று ஒரு உரத்த சப்தம் கேட்டது. அது முன்னே ஒருபோதும் அம்மாதிரி கேட்காததால் பயந்துபோய், அது என்ன சப்தம் என்று அம்மாவைக் கேட்டது.

"ஓஹோ! அது மனிதர் என்னும் பிராணிகள் தூங்கும்போது செய்யும் சப்தம். அதோ பார், உன் கீழே ஒருவன் தரையில் படுத்துக் கொண்டிருக்கிறான். நான் சொல்வதை இப்போது கவனமாய்க் கேள்.

"உனக்குப் பசியாயிருக்கிறதா?" என்று தாய் கேட்டது.

"எனக்கு ரொம்ப தாகமாயிருக்கிறது" என்று மில்லி சொல்லிற்று.

'சரி. இந்த சரியான பானத்தை அடைவது எவ்விதம் என்பதை நான் சொல்லுகிறேன். மெதுவாய் என்னுடன் பறந்து வந்து அவன் புஜத்தின்மேல் உட்காரு. அவன்மேல் மோதாதே அப்படிச் செய்தால் விழித்துக்கொண்டு விடுவான். உடனே உன் கன்னத்தில் ஒரு அறை அறைவான். நீ இறந்துபோவாய்.'

'ஹோ! அம்மா. எனக்கு நடுக்கமாயிருக்கிறது. அவன் விழித்துக்கொள்ளாமல் இருக்க வேண்டுமே. என்னை நசுக்கினால் எனக்கு அருவெறுப்பாய் இருக்கும்.' என்று மில்லி சொல்லிற்று.

உடனே, தாய்க்கொசுவும், மில்லிக் கொசுவும் தூங்குகிறவன் புஜத்தின்மேல் மெதுவாய்ப் பறந்தன.

'இப்போது நீ உன்னுடைய நீண்ட கூர்மையான துதிக்கையால் குத்தவேண்டும். அவன் சர்மத்தின் உள்ளே நுழையும்படிவிட்டு, இரத்தரத்தத்தை உறிஞ்சு' என்று தாய்க்கொசு சொல்லிற்று.

தாய் சொன்னபடியே மில்லி செய்தது. ஆஹா. அந்தப்பானம் எவ்வளவு ருசியாயும் ஆனந்தமாயுமிருக்கிறது. மில்லி குடித்துக் குடித்துக் சலிப்படைந்து எவ்வளவு குடிக்க முடியுமோ அவ்வளவும் குடித்தது.

இது கொட்டினதால் அந்த மனிதன் விழித்துக் கொண்டான். ஆனதுபற்றி தாய்க் கொசுவானது மில்லியைப் பார்த்து "சீக்கிரம், நாம் தப்பித்துக் கொள்ளவேண்டுமானால் உடனே புறப்படவேண்டும்" என்று சொல்லி இரண்டும் புறப்பட்டுப் போய்விட்டன.

என்ன வேடிக்கை! என்று மில்லி ஆச்சரியப்பட்டது. அம்மா, மறுபடியும் அம்மாதிரி செய்வோம், வா; என்று தாயைக் கூப்பிட்டது.

சரிதான். ஆனால் நாம் வேறொருவனைத் தேடவேண்டும். இந்த மனிதன் விழித்துக்கொண்டிருக்கிறான். விழித்துக் கொண்டிருப்பவர்களைக் கடிப்பது அபாயம். ஏனெனில் அவர்களுக்கு கோபம் வரும். அவர்கள் உன்னைக் கொல்ல முயலுவார்கள்.

'ஓ ஹோ ஹோ. அப்படியா' என்று மில்லி சொல்லிற்று.

தாய்க் கொசுவானது மில்லியை அழைத்துக் கொண்டு, ஒரு வீட்டின் தாழ்வாரத்தில் தூங்கிக்கொண்டிருக்கும் ஒரு ஸ்திரீயை அணுகிற்று. அவளுடைய முகத்தின் மேல் அவைகள் உட்காரும் தருவாயில், விசித்திரமான சப்தம் ஒன்று கேட்டது. அதைக் கேட்டதும் இவைகள் நடுங்கின. முன்னே குறட்டை விட்டுக்கொண்டு தூங்கின மனிதன் சப்தத்தை விட வேறு மாதிரியாக விருந்தது. இது கிடு கிடென்ற சப்தம். வர வர அது உறத்த சப்தமாய், அந்த ஸ்திரீயானவள் அசைந்து அசைந்து நடுக்கங் கொண்டனள்.

'அம்மா! இது என்னமாயிருக்கலாம்' என்று மில்லி கேட்டது.

'அதுவா; மனிதர்களுக்கு மலேரியா என்ற ஜுரம் வந்தால் அவர்கள் இம்மாதிரி சப்தம் போடுகிற வழக்கம். அவர்கள் பற்கள் ஒன்றின்மேலொன்று இடிபடும். அவர்கள் தேகங்கள் குலைப்பெடுக்கும், இந்த நோயை உண்டாக்கும் சிறு ஜந்துக்களை நாம் தாம் கொண்டுபோகிறோம் என்று அவர்கள் நம்மை நிந்திக்கிறார்கள். நாம் அவர்களைக் கடிக்கும்போது, இந்த மலேரியா பூச்சிகள் அவர்கள் இரத்தத்தில் கலந்து அவர்களை அசௌக்கியத்திற்குள்ளாக்குகின்றனவாம். அதைப்பற்றி நமக்கென்ன. ஆனால் அவர்கள் இரத்தம்மெலிந்து ஸத்தற்றுப்போய்விடுமானது பற்றி நாம் அதைக் குடிப்பது நல்லதல்ல. ஆனதுபற்றி நாம் வேறோரிடம் சென்று வேறொருவனைக் கடிப்போம்' என்று தாய்க்கொசு சொல்லிற்று. 'இது ஒரு நல்ல ஏற்பாடுதான். அதோபார்; அதோ அருகாமையில் ஒரு வீடு இருக்கிறது. அதன் உள்ளே நுழையலாம். அங்கே யாராகிலும் அகப்படுவார்கள்' என்று மில்லி சொல்லிற்று.

ஆனால் தாயக்கொசு தன் தலையை அசங்கி, 'அங்கே பிரயோஜனமில்லை. நான் முன் ஒரு தபா அங்கே போயிருந்தேன். அங்கே வசிப்பவன் ஒரு பெரிய வெள்ளை வலையை தன் படுக்கையைச் சுற்றி தொங்கவிட்டிருக்கிறான். அவனை அணுக முடியாது,' என்று சொல்லிற்று. ஆகிலும் அந்த வலையை உபயோகப் படுத்தாமல் அநேகர் இருக்கிறார்கள். அவர்களைப் போய்க்கடிக்கலாம் வா, என்று சொல்லி அழைத்துக்கொண்டு போய் விட்டது.

கிராமத்தின் மற்றொரு பாகத்திற்குப் பறந்து செல்லும் போது, இவர்கள் இன்னொரு விஷயம் கூடசெய்கிறார்கள், என்று தாய்க் கொசு சொல்ல ஆரம்பித்தது.

'அதென்ன அம்மா,' என்று மில்லி கேட்டது.

'அதுவா! சில சமயங்களில் குட்டை ஜலத்தில் அவர்கள் எண்ணெயைக் கொட்டுகிறார்கள். அது முழுதிலும் பரவி, இறக்கை முளைக்காத என் குட்டிகளையெல்லாம் நாசமாக்கி விடுகிறது. ஐயோ! இந்த மாதிரி என் வம்சம் அநேகமாய் நாசமாய் விட்டது.'

'இந்த மானிடர்களுக்கு நம்மேல் அவ்வளவாக இஷ்டம் இல்லை போலத் தென்படுகிறது. நம்மை ஒழிக்க வேறு ஏதாகிலும் செய்கிறார்களா' என்று மில்லி கேட்டது.

'ஆம். அவர்கள் ஏதோ கொயினா என்கிற மருந்து ஒன்று சாப்பிடுகிறார்கள். அது அவர்கள் வியாதியைத் தீர்ப்பதோடு, நாம் கடித்தாலும் அவர்களுக்கு அந்த வியாதி வரவொட்டாமல் தடுக்குமாம்'. என்று சொல்லி, மேலும் தாய்க்கொசு சொல்வதாவது "அதைக் குறித்து எனக்குக் கவலை இல்லை. குட்டையில் எண்ணெயைக் கொட்டுவதும்

படுக்கையைச் சுற்றி வலைபோட்டுக்கொள்வதும் இந்த இரண்டும் தான் எனக்குப் பிடிக்க வில்லை ''.

'இம்மாதிரி அவர்கள் எப்போதும் செய்யாதது என்ன முட்டாள்தனம்' என்று மில்லி தனக்குள்ளே நினைத்துக் கொண்டு, 'அவர்கள் அவ்வாறு செய்யாததே எனக்கு சந்தோஷம்.' என்று யோசித்ததாம்.

உடனே ஒரு லக்ஷணமான சிறு பையனைக்கண்டு, அவன்முகம், கை, கால் முழுதும் கடித்து அவன் இரத்தத்தைக் குடித்தன.

'அந்தப் பையன் கூடிய சீக்கிரத்தில் அசௌக்கியப் படுவான்' என்று தாய்க்கொசு சொல்லிற்று. இவனைக் கடித்ததாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், சில வாரங்களுக்குப் பிறகு அவன் இரத்தம் மெலிந்து உபயோமற்றதாகிவிடும். மறுபடியும் அவனையே கடித்து இரத்தம் ருசியாயில்லை யென்றால் என்ன பியயோஜனம்.

உதயமானதும், தாய்க்கொசுவும் மில்லியும் மிகவும் களைப்படைந்து விட்டன.

'போவோம். நமது குட்டைக்குப் போய் படுத்துறங்குவோம். இன்றிரவு மறுபடியும் இக்கிராமத்திற்கு வந்து இன்னொரு விருந்து சாப்பிடுவோம்' என்று தாய்க்கொசு சொல்லிற்று.

அவைகள் அவ்வாறே பறந்து சென்று தண்ணீருக்கு அருகிலுள்ள புதரில் சௌக்கியமாய் தங்கின. மில்லி பெருமூச்சுவிட்டுக்கொண்டு "எனக்கு இறக்கைகள் முளைப்பதற்கு முன்னே தண்ணீரில் எண்ணெய் கொட்டாததைப்பற்றி சந்தோஷிக்கிறேன். நான் பிடிக்கப்படமாட்டேன் என்றும் நம்புகிறேன்" என்று முணு முணுத்துக்கொண்டே உறங்கி விட்டது.

இதன் மத்தியில், கிராமத்திலுள்ள அச்சிறு பையன் விழித்துக்கொண்டு 'அம்மா இந்தப் பாழும் கொசு என்னை மறுபடியும் கடித்து விட்டதம்மா!' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.

மலேரியா ஜுரத்தினால் வருந்திய ஸ்திரீயோ தலையை அசைத்துக்கொண்டு, ஜுரத்தால் நடுங்கி. 'ஐயோ, ரொம்ப அசௌக்கியமாயிருக்கிறதே. யார் நகரத்திற்குச்சென்று தபாலாபீஸிலிருந்து கொயினா வாங்கிக் கொடுப்பார்கள்' என்று சொல்லிப் புலம்பினாள்.

இதெல்லாமிருக்க கொசு வலையின் கீழ் படுத்திருந்த மனிதன் இரவு முழுதும் சுகமாகத்தூங்கி காலையில் தேகத்தை நீட்டிக்கொண்டு "இக் கொசுவின் உபத்திரவத்திலிருந்தும் பாது காத்துக் கொள்வது, எவ்வளவு மேல் எனக்கு மலேரியா வராது." என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்—தி ட்ரேஷர் சேஸ்டு.

உமது குழந்தைக்கு என்ன வயது?

அதன் வயதிற்குத் தக்கபடி எவ்வாறு நடக்க வேண்டுமோ அவ்வாறு நடக்கிறதா?

6 மாதம் முதல் 10 மாதம் வயதுள்ள சாதாரண குழந்தை பின் சோல்லியபடி செய்யும்.

1. திரும்பி வயிற்றுப் பக்கமாகப் படுத்துக்கொள்ளும்.

2. தலையை இடித்துக்கொண்டு, வயிற்றுப் பக்கமாக படுத்திருக்கும் போது மார்பைத் தூக்கும்.

3. உட்கார வைக்கும் போது தலையை நிமிர்த்தி வைத்துக் கொள்ளும்.

4. தனது கைகளால் வஸ்துக்களைப் பிடிக்கும்.

5. வஸ்துக்களைப் பிடித்து வாயில் போட்டுக் கொள்ளும்.

6. தன் கைகளிலுள்ள வஸ்துக்களைக் கொண்டு விளையாடும். அந்த வஸ்துக்களை பிடுங்கிக்கொண்டால் அழும்.

7. ஒரே காலத்தில் ஒவ்வொரு கையிலும் ஒவ்வொன்றாக இரண்டு வஸ்துக்களைப் பிடித்துக் கொள்ளும்.

8. மா மா பா பா டா டா என்னும் சப்தங்களை உச்சரிக்கும்.

9. சிரிக்கும்.

10. தாயை இன்னாரென்று அறிந்து கொள்ளும், அவளைப் பார்த்தவுடனே சந்தோஷப்படும்.

11. சிரிக்கிற முகத்தைக் கண்டால் தானும் சிரிக்கும்.

10 மாதமுதல் 18 மாதம் வரையிலும் உள்ள குழந்தை.

1. ஏதாகிலும் ஒரு வஸ்துவை ஆதாரமாதப் பிடித்துக் கொண்டு நிற்கும். சில சமயங்களில் ஒன்றையும் பிடித்துக் கொள்ளாமலே நிற்கும்.

2. மெத்தைப் படிக்கட்டுகளின் மேல் தவிழ்ந்து செல்லும்.

3. பிடித்துக்கொண்டால் சில அடிகள் நடக்கும்.

4. கைவிரல்களாலும் கட்டைவிரல்களாலும் வஸ்துக்களைப் பிடிக்கும்.

5. காட்டிக்கொடுத்தல். பெட்டிகளில் வஸ்துக்களை வைக்கும்.

6. கோடுகளைக் கிறுக்கும்.

7. ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு வஸ்து இருந்த போதிலும், மூன்று வஸ்துவை பிடிக்க முயலும்.

8. ஒளித்து வைத்திருந்தால் அதன் விளையாட்டுக் கருவிகளைத் தேடி அவற்றைக் கண்டுபிடிக்க முயலும்.

9. மா, பா என்னும் சிறு பதங்களைச் சொல்லும்.

10. கூப்பிட்டால் பதில் உரைக்கும்.

11. கொடு; எடுத்துக்கொள் முதலிய பதங்களைச் சொன்னால் தெரிந்து கொள்ளும்.

12. 'அதை எடுக்காதே,' 'இதை எடுக்காதே' முதலிய சட்டளைகளைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்கும்.

13. இடது கையை விட வலது கையை அதிகமாக உபயோகப் படுத்தும்.

18 மாதம் முதல் இரண்டு வருடம் வரையில்.

1. நடக்கும்.

2. உட்கார்ந்து கொண்டே படிக்கட்டிலிருந்து கீழே இறங்கும்.

3. வஸ்துக்களை எறியும்.

4. (வத்திப் பெட்டி களைப்போல்) இரண்டு மூன்று சிறு பெட்டிகளை, காட்டினால், அடுக்கடுக்காய் ஒன்றின்மேலொன்று வைக்கும்.

5. இரண்டு கைகளாலும் மூன்று வஸ்துக்களைப் பிடித்துகொள்ளும்.

6. சில வார்த்தைகளைப் பேசும்.

7. கேட்டால், கை இது, வாய் இது என்று காண்பிக்கும்.

9. காட்டும் போது காட்டும் படத்தின்மேல் ஆசை காண்பிக்கும்.

10. தன் விரல்களைக்கொண்டே சாப்பிடும்.

11. எப்போது கக்கூஸுக்குப்போக வேண்டும், எங்கே போக வேண்டும். என்பன தெரியும்.

12. உடை உடுக்கும் போது தகுந்தபடி திரும்பிக் காண்பிக்கும்.

இரண்டு வயது முதல் மூன்று வயது வரையில்.

1. 1 இதைப்போல் நேர்க்கோடாக கோடிழுக்கும்.

2. காண்பித்துக் கொடுத்தால், இரண்டாக ஒரு காகிதத்தை மடித்துக் காண்பிக்கும்.

3. சாமான்கள் ஏதாகிலும் தூர இருந்தால் ஒரு கம்பால் தன்னிடம் தள்ளிக் கொள்ள முயலும்.

4. மூன்று நான்கு பெட்டிகளை ஒன்றின்மேலொன்று வைத்து அடுக்கும்.

5. மூன்றைச் சொற்கள் உள்ள வாக்கியங்களைச் சொல்லும்.

6. தனக்குத் தெரிந்த வஸ்துக்களை படங்களைக் காண்பித்தால் சொல்லும்.

7. ஒரு வஸ்துவின் வெளிப்பக்கம் எது, உட்பக்கம் எது என்று தெரிந்து கொள்ளும்.

சென்னை-600 008

8. கவனமாய்க் கதைகளைக் கேட்கும்.
9. தனியாய் விளையாடும்.
10. அநேக கேள்விகளைக் கேட்கும்.

மூன்று வயது முதல் நான்கு வயது வரையில்.

1. —இதைப்போல் மட்டமான கோடுகளையும், O இதைபோல் வட்டங்களையும், காண்பித்துக் கொடுத்தால் போடும்.

2. உருண்டை வஸ்துக்கள் இவை, சதுரமான வஸ்துக்கள் இவை என்று தெரிந்து கொள்ளும்.

3. ஒன்றன் மேல் ஒன்று 5 .6. பெட்டிகளை அடுக்கடுக்காய் வைக்கும்.

4. ஒரு படத்தைப்போல் வஸ்துக்களை ஏற்பாடாய் வைக்கும்.

5. நான், நீ, என்ற பதங்களை உபயோகிக்கும்.

6. பெரிது, சிறிது, வெள்ளை, கருப்பு, முதலிய பதங்களை உபயோகிக்கும்.

7. எதற்காக, ஏன் மனிதன் கூட, முதலிய பதங்களையும் உபயோகிக்கும்.

8. தனக்குச்சொன்ன கதைகளை திருப்பிச் சொல்லும்.

9. அதன் பெயரைச் சொல்லும்.

10. தனது ஜோடு, சொக்காய் முதலியன போட்டுக் கொள்ளும்படி விரும்பும்.

11. தனது வஸ்துக்களை வரிசைக்கிரமமாய் வைக்கும்.

12. விளையாடும் போது தனது சாமர்த்தியத்தைக் காண்பிக்க முயலும்.

13. வீட்டை விட்டு வெளியே போக விரும்பும்.

14. கண்ணாடியில் பார்த்துக் கொள்ளும்.

15. 2.—3. எண்களைச் சொல்லும். அதாவது ஒருதரம் கேட்டவுடன் 2-5-1 என்று சொல்லும்.

16. நிறங்களின் பெயர்கள் தெரியும், கேட்டால் சரியான நிறத்தைக் காட்ட முடியாது.

நான்கு வயது முதல் ஐந்து வயது வரையிலும்.

1. + இம்மாதிரி குறிக்குக்கோடுகள் போடும்.

2. ஒன்றுக்குள் ஒன்றுள்ள நான்கு பக்கங்களுள்ள இரண்டு உருவங்களின் மத்தியில் கோடுகள் இழுக்கும்.

3. முதல்பாட புஸ்தகத்தின் எல்லா பதங்களையும் உச்சரிக்கும்.

4. தானகக் குளிக்கும், பற்களைத் துலக்கும், சொக்காயின் பொத்தானைக் கழற்றும்.

5. மற்றவர்களுடன் விளையாடும்.

6. ஒருதரம் கேட்டவுடன், 3 அல்லது 4 எண்கள் கூடிய சங்கியைச் சொல்லும் அதாவது 2-5-7-3.

7. ஒன்று முதல் 10 வரையில் எண்ணும்.

8. இரண்டு கோடுகளில் எது பெரிது, எது சிறியது என்று சொல்லும்.

9. இப்போது இரவா, பகலா என்று கேட்டால் சொல்லும்.

10. காண்பித்துக் கொடுத்தால், ஒரு கடிதத்தை நான்கு பாகங்களாக மடக்கும்.

பிழைத் திருத்தம்.

ஆரோக்கிய தீபிகை. அக்டோபர் 1931.

பக்கம் 197. வலது காலம்.

வரி 42 **पद्भ्यां** என்பதற்குப்பதிலாக **पद्भ्यां** என்று படிக்கவும்.

வரி 44 **उरसा** தெடைகளாலும் என்பதற்குப்பதிலாக **उरसा** மார்பாலும் என்று படிக்கவும்.

---

39 வருஷ அனுபவத்திலிருந்து சுவாஸாசய க்ஷயத்திற்கு எடுத்ததென்று தெரிந்திருக்கிறது.



ஆங்கியர்ஸ் எமல்ஷன் இரைப்பை, குடல்கள் இவைகளில் ஏற்படும் அழற்சியைப் போக்கி, அவைகளைச் சமனப்படுத்தி ஆகாரமும், மருந்தும் அங்கு தங்கும்படி செய்கிறது. சுவாஸாசயக்ஷயத்தில் பிரசன்னமாகவிருக்கும் ஜீரணக் கோளாறுகளை அது நிவர்த்தி செய்து, சரீரத்திற்கு ஊட்ட மேற்படுவதற்கு உதவி செய்கிறது.

ஆங்கியர்ஸ் எமல்ஷனது ஜீரண வேலை ஜருராக நடந்து, ஆகாரம் சரீரத்தில் ஒட்டும்படி செய்வதன் மூலமாக பிணியாளி ஊட்டங் கொடுக்கக்கூடிய ஆகாரங்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறது. அது சரீரத்திற்கு சக்தியைக் கொடுத்து, வியாதியை எதிர்த்தசிற்கும் சக்தியைப் பெருக்கி, வியாதிகளை உண்டுபண்ணும் கிருமிகளுக்கு வைரியாக இருந்து வருகிறது.

சுவாஸாசய க்ஷயரோகிகளுக்கு ஏற்படும் ஜுரம், இரவில் ஏற்படும் வியர்வை, இருமல், களைப்பு இவைகளை ஆங்கியர்ஸ் எமல்ஷன் சமனப் படுத்தி, பிணியாளியின் வாழ்வு சவுகரியமானதாக இருக்கும்படி செய்கிறது. சுவாஸாசய க்ஷயரோகிகளுக்கு ஆங்கியர்ஸ் எமல்ஷனைக் கொடுத்தால் இருமலை அடக்குவதற்கு மாற்றுகளை கொடுக்க வேண்டியதில்லை.

எல்லா எமல்ஷன்களிலும் ஆங்கியர்ஸ் எமல்ஷனது சுவையுள்ளது. நுட்பமான குடலுள்ளவர்களும் அதைச் சகித்துக் கொள்ளக்கூடும். சரீரத்தின் இதர உறுப்புகளின் வேலையை அது எவ்விதத்திலும் பாதிப்பதில்லை. பிணியாளிகள் சந்தோஷமாக அதை உட்கொள்ளுகிருர்கள். சுவாஸாசய க்ஷயம் முற்றியிருக்கும் கேஸ்களில் அதனுடைய சமன சக்தி பாராட்டக்கூடியதாக இருக்கிறது. பிணியாளிக்கும் நிச்சயம் அனுகூலம் ஏற்படுகிறது.

ANGIER'S EMULSION

பெட்ரோலியத்திலிருந்து இறக்கிய அஸல் எமல்ஷன்.

வைத்தியர்களுக்குமாதிரி இனம். அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்—

மெஸ்ஸர்ஸ் மார்ட்டின் அண்ட் ஹாரிஸ், லிமிடெட்

ரௌலெட் பில்டிங்பிரன்ஸப் தெரு, கல்கத்தா:

ப்ரோப்ரைட்டர்கள், ஆங்கியர்ஸ் கெமிக்கல் கம்பெனி லிமிடெட்,

‘தமிழன்’ வாரப்பத்திரிகைக்கு

தாங்கள் சந்தாதாரர்கள் தானா?

இல்லாவிட்டால்

உடனே 3 ரூபாயை அடியில் கண்ட விலாசத்துக்கு அனுப்பி சந்தாதாராகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

ஏன்?

“தமிழன்” தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக உழைக்கின்றது. தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்கு குறுக்கிடும் சாஸ்திரம், புராணம், இதிகாசங்கள் முதலியவற்றை வீழ்த்தி, நேறியில் செலுத்துகிறது. தாழ்த்தப்பட்டவர்களின் இரத்தத்தில் சுயமரியாதை யென்னும் பிறப்புரிமையை பாய்ச்சுகின்றது. ஜாதி வேடதாரிகளின் கொடுமைகளையும் தந்திரங்களையும் கண்டித்து, குலத்தை பாதுகாக்கும் சாமர்த்தியம் தமிழனின் பெருமைக்கு காரணமாகும். இதன் வளர்ச்சியே ஒடுக்கப்பட்ட பல வகுப்பினரின் முன்னேற்றத்திற் கறிகுறியாகும். ஆதலால் குல நலத்தை நாடும் அன்பர்கள் மதபேதம் பாராட்டாது சந்தாதாரராய் சேர்ந்து ஆதரிக்க வேண்டும். விலாசம் தெரிவிப்பவருக்கு மாதிரி பிரதி இனாம்.

மானேஜர் :—“தமிழன்” காரியாலயம்,

ஆண்டர்சன்பேட்டை, P. O.

கோலார் தங்கவயல், (S. I.)

தமிழரசு

ஓர் அரிய வாரப் பத்திரிகை

சென்னையின்றும் வியாழக்கிழமை தோறும் வெளிவரும் இப்பத்திரிகை சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மை யடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; அரசியல் துறையில் இந்தியாவின் நலனையே கருதி, அவா அச்சமின்றி எடுத்துரைக்கும்; உலக முழுதும் நடைபெறும் அரிய நிகழ்ச்சிகளை இனிய அமைப்பில் துலக்கும். இதனைப் படிப்போர் சகல துறைகளிலும் உயர்வுறலாம்.

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் அரிய வைத்தியக் கட்டுரைகள் வரையப் பெற்று, திரிசிரபுரம் ஆ. நடராஜன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகின்றது.

வருட சந்தா ரூபா 3 தனிப் பிரதி அணா 1.

மானேஜர். “தமிழரசு” ஆபீஸ்,

சென்னை.

பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்து தேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டு போகிறார்கள். தாய்மார்கள் கர்ப்பிணிகளாகவிருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக்கவனியாமல் தேகத்தை பலஹீனப் படுத்திக்கொள்வதும், பிரஸவ காலத்தில் டாக்டர், தேர்ச்சி பெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல், புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக் கொண்டு மருத்தவம் செய்து கொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யாமலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாகவிருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாகவிருக்கிறது. முதல் உதவி புரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன. பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும் வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச் சிறு நூல் கற்பிக்கிறது. இதில் பதினான்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. கர்ப்பச் சின்னங்கள், கர்ப்ப காலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரவசம், கஷ்டப் பிரவசம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவ காலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப் பட்டிருக்கிறது. விலை அணா 6.

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். வி. பி. யில். அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும். வேண்டுவோர் சென்னை தம்பு செட்டித் தெரு 323 செ. ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். விலாசம்—ஆரோக்கிய தீபிகை மானேஜர் தபாற்பெட்டி 166, சென்னை என்று எழுதவும்.

சஸ்திர சிகிச்சைக்கு அவசியமில்லை

அல்ஸரைன் (ரெஜிஸ்டர்ட்.)

ஸிவில் சர்ஜன் டாக்டர் எ. என். ஸேன், எம். பி. எழுதுவதாவது:—ஆழமான சஸ்திர ரணங்களையும் கட்டு இல்லாமல் வெகு சீக்கிரத்தில் குணப்படுத்தி விடுகிறது. விஷ சம்பந்தம் ஏற்பட்டு விடுமென்ற பயத்திற்கு இடமில்லை.

கண் கோளாறுகள்.

நமது தேங்காய் மார்க்கு தாமரைத் தேனானது கண்களில் ஏற்படும் எல்லாக்கோளாறுகளையும் சஸ்திர சிகிச்சையின்றி குணப்படுத்தி விடுகிறது. இயற்கை ஔஷதம். டிராம் 1-க்கு ரூ. 2-8-0. 2 டிராம் ரூ. 4. தபாற் செலவு வேறு. பெங்கால் கண்டியிலிருக்கும் நியூ பார்முலா கம்பெனிக்காவது, ஏஜெண்டுகளான தாதா கம்பெனி, 52, நயினியப்ப நாயக்கன் தெரு, சென்னை; கெம்ப் அண்டு கம்பெனி, கெமிஸ்டுகள், பம்பாய்; ஜே. நீரத் அண்டு கம்பெனி, கெமிஸ்டுகள், கராச்சி இவர்களுக்காவது விபரங்களுக்கு எழுதுங்கள். தபால் சார்ஜ் பிரத்யேகம்.

Ask free particulars from :—

New Formula Co., Kandi, Bengal.

Agents :—Sri Krishnan Bros., P. O. Box 166 Madras, Dadha & Co., 52, Nayniappa Naick St., Madras.

Homœo-Degrees ! Books !

All can learn homoeopathy by reading our Homoeo materia medica Rs. 5. Homoeo-practice Rs. 4. and get H. L. M. S., H. M. B., etc., Homoeo-Ayur-Unani degrees by correspondence. Free prospectus.

DR. CHHATBAR HOMOEOPATHIC Institute (Reg). MAHUVA *(Kathiawar Dt).*

ராவுஜியின் படை மருந்து.

படைகளுக்கு இது கைகண்ட திராவகம். எவ்வளவு கெடுதலான படைகளையும் சொற்பகாலத்திற்குள் போக்கிவிடும். சர்மத்தையாவது அல்லது ஆடைகளையாவது கெடுத்துவிடாது. தினமொரு தடவை இரவில் படுத்துக்கொள்ளும்போது தடவிக்கொள்ளவேண்டும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1.

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்,

323, தம்புசெட்டித் தெரு, சென்னை.

ஒரு மாதாந்தரத் **ஸ்ரீவைஷ்ணவன்** தமிழ்ப்பத்திரிகை.

மக்கள் இகத்திலும் பரத்திலும் சுகவாழ்வையடைவதற்கு சமய ஞானம் அவசிய மென்பதைச் சொல்லவேண்டுமோ? மாதந்தோறும் வெளிவரும் இவ்வைஷ்ணவன் மக்கட்கு சமய ஞானத்தை உணர்த்துவதில் தலைசிறந்தவன். இக்காலத்தில் பலர் சமய உண்மைகளையும் சமய ஒழுக்கத்தின் காரண காரியங்களையும் அறிந்து கொள்ளாமலே வைதிகவேடம் புனைந்திருக்கிறார்கள். இதனால் நம் நாட்டில் மூடபக்தியும் மூடநம்பிக்கையும் ஏற்பட்டு பல இன்னல்கள் உண்டாகின்றன. இக்குறையை அகற்ற இவ்வைஷ்ணவன் ஓர் நல்ல சஞ்சீவி. இவ்வைஷ்ணவனில் வெளியிடப்படும் விஷயங்கள் பின்வருமாறு:

ஆழ்வாராசார்யர்கள் முதலிய பெரியோர்களின் சரிதங்கள், அவர்களது அருளிச் செயல்கள், அவைகளின் வியாக்கியானக் குறிப்புகள், பாகவத, இராமாயண முதலிய இதிகாசக் குறிப்புகள், வேதம் உபநிடதம் பிரம்ம சூத்திரம் பாஷ்யம், கீதை முதலிய வடமொழிநூல்களின் குறிப்புகள், கம்பன் முதலிய மகாகவிகளின் கவித்திறம், பல முக்கியநூல்களின் மொழி பெயர்ப்பு, நாடக அமைப்பு, கவியமைப்பு, கவிச்சித்திரம், பழமொழிகள், வடமொழி தென்மொழிகளின் மகிமை, ஆரியர் தமிழர் இவர்களின் நாகரீகம், தமிழ் சங்கப் புலவர்கள் மகருஷிகள் ஆழ்வாராசார்யர்கள் அரசர்கள் இவர்களின் கால ஆராய்ச்சி, பூதாதிகளின் சக்தி விசேடம், கிரகாதிகளின் அமைப்பு, சோதிடத்தின் நுணுக்கம், அஷ்டாங்க யோகம் சித்தி இவைகளின் தத்வம், பிரணவ முதலிய மந்திரங்களின் தத்வம், மக்களது தேகாரோக்கியத்திற்கு இன்றியமையாத சில வைத்தியப்பகுதிகள், மக்கட்கு அவசியமான திருத்தங்கள் முதலியனவாம். எல்லா வெளியீடுகளும் பெண்கள் பாலர்கள் முதல் எல்லோரும் எளிதில் படித்துணரும்படி தெளிய தமிழ் நடையில் எழுதப் பெறும். பத்திரிகை தேவையுள்ளவர்கள் சந்தாவைச் செலுத்தி அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வருடசந்தா தபால் செலவுள்பட ரூ. **1-0-0.**
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

T. R. பெரிய நம்பியார் எடிட்டர்.
ஸ்ரீ வைஷ்ணவன்.
84, தெற்குப்புதுத் தெரு திருநெல்வேலி.

விளம்பரம் செய்தால்
பலனுண்டு

ஆனால் அதை சரியான பத்திரிகை மூலமாய் செய்ய வேண்டும்.

சுவராஜ்யா வானது

எல்லா ஜனங்களாலும் கொண்டாடப் பெற்ற ஒரு இங்கிலீஷ் தினசரிப் பத்திரிகை.

உமது சாமான்கள், மைசூர், திருவாங்கூர், கொச்சி, முதலிய இந்திய ராஜ்ஜியங்கள் உள்பட தென்னிந்தியா முழுவதிலும் ஏராளமாய் விலையாகும்படி செய்யும்.

கட்டண விபரங்களுக்கு—

டைரக்டர்—இன். சார்ஜ்.
விளம்பர இலாகா,
சுவராஜ்யா,
ப்ராட்வே, மதராஸ்.

அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

JL Lm 211, N24
N31.8.12
128580
சென்னை-600 008.

ஆரோக்கியப் படத்திரட்டு.

தொகுதி 2, 1930.

சரீராரோக்கிய சம்பந்தமான விசித்திரப்படங்கள் பல இதில் அடங்கியுள்ளன. காற்று, ஜலம், ஆகாரம், குழந்தைப் பருவம், தாய்ப்பருவம், தூசு, வியாதி, பிரதம சிகித்ஸை, சரீரப் பயிற்சி, ரோக சிகித்ஸை, முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிப்போல் திருஷ்டி பூர்வமாகவே ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும், மாணவன் மாணவியும் கண்டறிந்து, நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அடைந்து ஆனந்தப்படக்கூடியது. ஒவ்வொரு வீட்டிலும், பாடசாலையிலும், புத்தகசாலையிலும் பொதுப் புத்தகசாலையிலும் வைக்கத் தகுந்தது. தேகம் வியாதியால் மெலிந்து மனம் நொந்து கிடக்கும் சமயத்தில் நல்ல துணைக்கும் சிநேகிதனுக்கும் ஒப்பாக இருக்கக் கூடியது. எவனொருவன் திடகாத்திர சரீரத்துடன் ஆரோக்கியமும் தீர்க்காயுளும் அடைய விரும்புவானோ, அவனுக்கு கிளர்ச்சியையும், உற்சாகத்தையும், உபதேசத்தையும் தரக்கூடியது. இது பெருமைக்கு வாங்கி வைக்க வேண்டிய புத்தகமன்று. இது ஒவ்வொரு வீட்டிலும், சங்கத்திலும், கிளப்பிலும், பாடசாலையிலும், புத்தக சாலையிலும் அத்தியாவசியமாக இருக்க வேண்டிய புத்தகம்.

முதல் தொகுதி சீக்கிரம் செலவாகி விட்டபடியால், அநேகர் ஏமாந்து போனார்கள். இன்றே ஆர்டர் செய்யுங்கள். விலை ரூ. 1, முன்பணமாக அனுப்பவேண்டியது. ஆரோக்கிய தீபிகையின் சந்தாதாரர்களுக்கு அணா 12, முன் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டியது.

உடனே அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதிக் கொள்ளவும்.

மனேஜர்,
" ஆரோக்கிய தீபிகை "
323, தம்பு செட்டித் தெரு, சென்னை

நல்ல பற்கள் நல்ல ஆரோக்கியத்தை நிச்சயமாய்த் தரத் தகுந்தன

நம்முடைய விஷ சம்பந்த மற்றதும், வலுவு கொடுக்கக் கூடியதுமான பற்பொடியை உபயோகித்தால் பற்கள் நன்றாயிருக்கும். விஷ சம்பந்தமற்றதும் வலுவைக் கொடுக்கக் கூடியதுமான அநேக மூலிகைகள் கலந்தது. பற்களுக்கு பலம் கொடுக்கக்கூடியது. பற்களை முத்துப்போல் வெளேரென்று செய்யக்கூடியது.

ஒரு டின் விலை அணா 12
3 டின் விலை ரூ. 2-0-0.
பல் பிரஷ் விலை அணா 14

ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ்
தபாற் பெட்டி 166, மதருஸ்

ஹார்லிக்ஸ்
மால்டெட் பால்

வியாதியிலிருந்து தேறிவருவோர்க்கு ஏற்ற ஆகாரம்

வளரும் குழந்தைகளுக்கு மிக நல்லது. பலத்ததும் ஆரோக்கியமானதுமான தேகங்களைக் கட்டுவதற்கு வேண்டிய எல்லா குணங்களும் ஹார்லிக்ஸில் அடங்கியுள்ளன.

ஹார்லிக்ஸானது தக்ஷணமே உபயோகப் படுத்தக் கூடிய தாய் மாத்திரை ரூபமாகவும் கிடைக்கும். இம் மாத்திரைகள் தித்திப்பு தின்பண்டங்களுக்கு ஏற்ற பதிலியாகும்.

ஹார்லிக்ஸில், நல்ல சுத்தமான பாலின் போஷணை குணமும், மால்டெட் பார்லி கோதுமை இவற்றின் போஷணைகுணமும் அடங்கியுள்ளன. சதையைக்கட்டுவதற்கு, அதிலுள்ள ப்ரோடீன் போதுமானது. அதில் கலந்துள்ள கார்போஹைட்ரேட்டுகள் வலுவைக் கொடுப்பதற்கு தகுந்த மூலாதாரமாகவிருக்கின்றன.

போஷணைக்குறைவினால் ஏற்பட்டுள்ள வியாதிகளுக்கும், கடூரமான நோய்களுக்கும், நோயிலிருந்து தேறி வருவோருக்கும் போஷிப்பு அதிகமாகவும் ஜீரணம் செய்து கொள்ளவேண்டிய முயற்சி கம்மியாகவும் உள்ள ஆகாரத்தை நோயாளிக்குக் கொடுக்கவேண்டிய அவசியமான நிலைமைகள் எவையோ, அவற்றிற் கெல்லாம் ஹார்லிக்ஸ் பெருத்த உதவியாயிருக்கும்.

உன்னுடைய பிணியாளிக்கு ஹார்லிக்ஸ் கொடு. நோயிலிருந்து தேறிவருவதை அது துரிதப்படுத்தும்.



ஹார்லிக்ஸ்

அசல் ஹார்லிக்ஸ்
மால்டெட்பால்

Printed at the People's Printing & Publishing House, Ltd., & Published by the Proprietor
Dr. U. RAMA RAU, MADRAS.